உ

ஓம் பரப்பிரம்மணே நம:

கணபதி துணை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

# திருக்கூடலையாற்றூர்
# மும்மணிக் கோவை.

இது
சிதம்பரத்தைச் சார்ந்த
விருதாங்கநல்லூர்
வித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயராகிய
ஐவநல்லூர்
பி. ஸ்ரீநிவாஸய்யரால்
இயற்றப்பட்டு

---

சிதம்பரம்
விநாயகசுந்தரவிலாஸம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1—9—1913.

உ

பரப்பிரம்மணே நம:

# சிறப்புப்பாயிரங்கள்.

## சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் காலசந்திக்கட்டளை ஸ்ரீமத் வே. தில்லைநாயகமுதலியாரவர்கள் இயற்றியது.

---

### நேரிசைவெண்பா.

கூடலையாற் றாருடைய கோமான்றன் மெய்ம்மைச்சீர்க்
கோடலையார் மும்மை மணிக்கோவைப்—பாடலையே
சொன்னான் புகழ்ச்சீனி வாசனெனுந் தொன்மறையோன்
முன்னு[illegible] அருள்பெருகு மாறு.

---

## திருவெண்காட்டைச் சார்ந்த பெருந்தோட்டம் வித்வான் ஸ்ரீமத் தே. சி. துரைச்சாமிபிள்ளையவர்கள் இயற்றியவை

---

### அறுசீராசிரிய விருத்தம்.

செய்வளர் கதிர்ச்செஞ் சாலி செங்கரும் பென்ன வோங்கும்
அய்வகல் லூரின் வாழ்வே ளருமறைக் கிழவ னான
மெய்வளர் பிச்சு வய்ய வேதியன் சிவன்றா ளுன்னிச்
செய்தவந் தன்னால் வந்த சீனிவா சய்ய னென்போன். (க)

பாடலைக் கேட்பான் பண்டு வன்றொண்டர்ப் பரிந்தழைத்த
கூடலை யாற்றூர் வள்ள லார்க்குக் கோகனத னேன்பிற்
காடலை யிற்றீ சர்க்கு மும்மணிக் கோவை யன்பால்
நீடலை யுலகி லென்று நிலவுறப் புனைந்தான் மன்னோ. (உ)

## சிதம்பரம் செந்தமிழ்ச் சங்க வித்வான் ஸ்ரீமத் தரு. ஞா. சண்முகத்தம்பிரான் அவர்கள் இயற்றியவை.

### கட்டளைக்கலித்துறை.

கோடலை யாற்றொழு தேகிடுஞ் சாப விகிதர்கள்சூழ்
கூடலை யாற்றார்த் தமிழ்மும் மணிக்கோவை கூத்துகந்தா
ராடலை யாற்றுற வன்பா லியற்றி யணிந்துபுகழ்ப்
பாடலை யாற்றுற லாலுறு மின்பம் பருகினனே. (க)

பாவிரி யுந்தமிழ்க் காப்பியம் பாடும் பரும்புலவர்
பூவிரி யும்புகழ்க் காவிரி மாநதி போந்தணிசெய்
மாவிரி யும்மறை வேளைவ நல்லூர் வளர்மறையோ
நாவிரி யுந்தகை யரசினி வாசநன் னுவலினே. (உ)

## சிதம்பரம் செந்தமிழ்ச் சங்க வித்வான் ஸ்ரீமத் கு. வேங்கடாசலம்பிள்ளையவர்கள் இயற்றியது.

### நேரிசையாசிரியப்பா.

மணிமெயறி கடல்சுலாஅம் வளநெடுநிர் நிலக்கட்
பசுந்தமிழ் பாவும் பதியவை பலவே
அவற்றுள்
சங்கத் தமிழ்தெரீஇச் சார்குநர் வாழுந்
துங்கத் தமர்தலஞ் சிற்சில சுடருமால்
அன்னுழி,
ஒல்காப் புலனுழு துண்மார் குழுவுட்
டொல்காப் பியமுதற் றோன்றா லருளிய
வகப்பொருள் பிறவு மாய்குநர் சிவ்வனுஞ்
சுகத்தல நிலாவால் சிலவா மன்றே
ஆதலின்,
முற்புக லியாவு முழுதொருங் குணரீஇச்
சிற்பா னருள்பெறூஉஞ் சிறப்பின் மேய

நாவல் லூரர்தா நானிலத் தின்றே
என்னு சங்கை எய்துத வியார்க்குந்
துன்று துளத்திற் புரிசுரு தம்மா
காவிரி வளப்பங் கருல்சோ ணாட்டில்
நாவிரி பதிகளுள் நாயக இலகமாய்ச்
சொற்றிடத் திகழு மற்றமி லைவ
நல்லூ ரதனி னுண்மறை யோரும்
விப்பிரக் குழுவினி லொப்பத் தோன்றி
யாதியம் பரனருள் தீதிலா தடைந்த
பிச்சு வையண முச்சிதன் றன்பா
லுச்சநா ளோங்க விச்சா கரனுப்
வந்து பிறந்தான் வண்டமிழ்க் குருமணி
செந்தமிழ்ச் சுதாகரச் சுந்தர னவற்கே
ஆசா னுடையபி தானமே ஸ்ரீநி
வாஸனென் றெவரும் பேசுவர் மாதோ
ஆனைநற் கவிஞரு டாமணி யண்ணல்
ஓ[illegible]ன தென்றமிழ்ச் சிந்துநீர்க் கடந்தே
அறிவெனுஞ் சேதுவி னமர்ந்தமை யுலகிற்
கிரிதிக ழொளிபோற் கெழுமியே பரவத்
தமிழ்ச்சுவை யொழுகுறச் சங்கநற் புதரிற்
காந்து செறுமிய கரையிலா நித்திலங்
கொழித்தனன் மும்மணிக் கோவையா யன்பால்
யாண்டெனின்,
முத்தினைப் பொழிமணி முத்தநன் னதியுஞ்
சுத்தசென் னீருஞ் சுவேதவெண் ணதியு
மெய்த்தகு வடிவமொன் றெனவே யொளிர்தலாற்
கூடலை யாற்றா ரெனவுரை நகர்க்கட்
பாடலை யுகந்தே யாடலைப் புரிந்தருள்
கீர்த்தன வல்லப நிமலனை தருட்டுணை
ஞானமெல் லடிமே னுரு
மூனமி லவன்புக ழோங்கிவா ழியவே

# கலியமலை

## ஸ்ரீமத் ந. சந்திரசேகர நாயகர் இயற்றியது.

### நேரிசை யாசிரியப்பா.

பாற்கடற் றோன்றிய பரிதி வானவன்
ஞாட்பிருட் கடியா நலந்தருந் தாங்கு
மேம்படு புகழின் மேதினி மகிழ்தர
முறையுளி படாது மூரிநீர் வையம்
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி
நடைமலைச் செல்லுரு ணற்படை நவின்று
பகைப்புர மழியா பழிச்சுந ரோம்பா
விசைச் செந்துக மேமுறத் தாங்கி
காத்திய நின்ற கரிகாற் செம்பியன்
இருநில வரம்பா மெழிறரு வெண்ணதிப்
பாங்க ரொளிர்தரும் பாடல் சான்ற
முல்லையு மருதமு மெல்லையில் வளந்தரும்
நல்லிசைப் புலவோர் நயந்திடு கூடலை
யாற்றூர் மேய வான்றிரு வடிக்கு
காவிரி புரக்குங் காவிரி நாட்டின்
றெய்வந் தங்கிய திறல்விளங்கு மூதூர்
ஐவநல் லூரெனு மரும்பதி தனக்கே
தொல்குடிச் சுட்டிய தொடர்வினைப் பற்றலர்
முற்றிய வறத்தின் முறைமை யாளர்
காமங் கடுஞ்சினங் கடிந்திடு காட்சியர்
தொன்மறை வழிவரு துகடீர் செல்வர்
சேஷாத் திரியெனுஞ் சீர்மிக வாய்ந்த
பிச்சு வையரும் பீடுறு வடமீன்
கற்பிற் சான்ற கவின்கொ ளம்மையாஞ்
சீதா லக்குமி செய்திடுந் தவத்தின்
பயனாய் வந்த பழிதீர் செல்வன்
சீ ரை பொருத்திய செம்மை வையத்
தாரை நூன்மதி யன்மையன் மாழ்கி
அன்னிக ளைம்புல வடங்கலர் செருப்ப

நெறியி னில்லா நிலைமைய ராகி
கல்லார் வெறீஇய நட்பினை வெஃகி
யல்லா ரோதி யடற்க லாங்கை
வார்தனப் புணைதழீஇ வழியறிந் தேனுய்
கருத்திரி வேலைச் சூழ்வளிப் பட்ட
வங்கங் கடுப்ப வல்வினை படர்தரு
மின்னி னிலையில மன்னுயி ராக்கை
வெறுக்கையிற் செறுக்கின் வீணா ளாற்றி
வாணா ளடைப்பான் வல்லுநர்த் தேடி
யிருந்தன னெய்த்து வேங்கைப் போர்ந்த
னென்னைப் புரத்த னுஞ்சீர் பல்கல்
எனநனி பழிச்ச வெவ்வந் தாங்கினை
யல்கலே யறிவு வன்மை யழிபசி
வருத்தம் வீழ்ப்பேய் வல்லுரங் கொளீஇ
பாலே பட்ட படுமரம் பெயற்றலைத்
தளிர்த்தாங் காகத் தளிர்த்தனை யிருந்து
செவிவா யாக நெஞ்சுகள னாகப்
பெட்டாங் குண்ணுதி பேதைமை தவிர்தி
யெனவாங் கருத்தி யென்னுறு வேழ்மையுந்
தவிர்த்திய வவிருத் தாவில் சீர்த்திக்
கண்ணின் மனத்திற் கலந்து நின்ற
பாவலர் போற்று நாவிரி யாசான்
சீனி வாசச் செந்தமிழ்க் குரிசில்
மும்மணிக் கோவை முற்றிய பண்பின்
மாதிரங் களிக்க மாசற வளித்தனன்
னூழி யூழி காலம்
வாழி யவன்புகழ் மண்மிசை தானே. (௩)

# சிறப்புப்பாயிரங்கள்

## தே. விருதாங்கநல்லூர்
## ஸ்ரீமத் ந. சுப்பராயப்பிள்ளை
### இயற்றியது.

---

எழுசீராசிரிய விருத்தம்.

பூக்களார் பொழில்சேர் கூடலை யாற்றுப்
புனைநட வலற்குசுந் தரற்குய்ப்
பாக்கொளு மாற்கு மும்மணிக் கோவை
பகர்ந்தனன் பத்தியான் புலவ
னாக்கமீக் கூரு மைவநல் லூரா
னந்தணன் பிச்சுவை யன்சே
யோக்குறு தமிழா னுவலுமென் னாசா
னேன்றவச் சீனிவா சகனே. (௧)

சிறப்புப் பாயிரங்கள்
முற்றுப்பெற்றன.

---

சிவமயம்.

# தலத்தைப்பற்றிய குறிப்பு.

இத்திருக்கூடலை யாற்றூரென்னுந்தலம் நடுநாட்டிலே வெள்ளாறென்னுஞ் சுவேதநதியும் திருமணிமுத்த நதியுங் கூடுமிடத்திலுள்ளது. ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளாற் பதிகம் பெற்றது. தேவகோட்டை சத்திரம் ஸ்ரீமாந் ரும. அரு. அருணாசலஞ் செட்டியாரவர்களால் மேற்கூறிய சங்கமத்திற்குக் கீழ்பா ரூதனமாய்க் கட்டுவிக்கப்பெற்று அவர்களால் நித்தியபூசையும், சிவநேசர்களும் பூமான்களுமாகிய பாளையங்கோட்டைசரவணப் பிள்ளையவர்களாலும், பேரூர் கிருஷ்ணப்பிள்ளையவர்களாலும் நைமித்திக பூசையுஞ் செய்யப்பெறுகிறது. இதன் மகிமைகளடங்கிய புராணமொன்று வடமொழியி லுண்டென்ப. அதைப் பொருளுடையார் தென்மொழியிற் பாடுவித்தல் உத்தம சிவபுண்ணியமும் புகழுமாகும்.

இங்ஙனம்,

வேநல்லூர் பி. ஸ்ரீநிவாஸய்யன்.

உ

ஓம் பரப்பிரம்மணேநம:

கணபதிதுணை.

# திருக்கூடலையாற்றூர்

# மும்மணிக்கோவை.

## விநாயக வணக்கம்.

### வெண்பா.

திங்கள் விளங்குஞ் சிரத்தான்சே யானைமுகன்
றுங்கப் பதங்க டுணைநல்கும்—பொங்குஞ்சீர்க்
கூடலையாற் றூரன் குனித்தல்வல் லாற்கிவணுன்
பாடலையாற் றும்மணிக்குப் பார்.

## நூல்.

### ஆசிரியப்பா.

திருமலி சிறப்பி னிருந்தசார் வைப்புங்
கருங்கட லுடுத்த பெரும்பெய ருலகமும்
பல்வேறு வைப்புமப் பாற்பட வகுத்தனை
வகுத்தவை யோம்பிச் செகுத்தனை மறைந்தே
ஆற்றும் வினைப்பய னனைத்துமக் கருத்தினை
போற்று மவைக்குப் பொலன்பத நல்கினை
இங்ஙன மிறைவ வெல்லா நீசெய
நல்வினை யில்லே னானெனக் கொண்டு
செல்கதிக் குறுதி செய்யிய வெண்ணேன்
பொன்னொடு மண்ணும் பொருளும் வேட்டுக்
கணமுநில் லாது கறங்கெனச் சுற்று
மாசுமலி மனத்தி னீசனாய் நின்றேன்
என்னறி விருந்த படியையென் சொல்கேன்
விண்ணோ ரேத்தும் வியத்தகு செல்வமொடு
மாடமலி கொடிகள் மங்கு றோயும்
பாடல் சான்ற கூடலை யாற்றூர்
ஆடல் வல்லோ யடியனே னுய்யச்

சீரியர் நாளுஞ் சிந்தையிற் கொள்ளும்
வாரிச மலரி னேர்தனி யமைந்த
அடிகளை யருளுதி யருளுரு வோயே. (௪)

## வெண்பா.

ஓதநீ ரோவா தொழுகுமணி முத்தஞ்சு
வேத நதிசேரும் வித்தகத்தாற்—சேதனர்கள்
கூடலையாற் றூராக் குறித்தவிட மேயோயான்
கூடலையா மன்மனத்திற் கொள். (௨)

## கட்டளைக் கலித்துறை.

கொள்ளை யுறச்சொலு மீனவ னுயுங் கொடுமுடியின்
மள்ளாற் கிரிமிசை மாதவ னுயு மதிநுதல்பால்
நள்ளிருட் டேதென நண்ணின னுய நடனவலன்
வெள்ளை மணிகொளுங் கூடலையாற்றூர் விரும்பினனே. (௩)

## ஆசிரியப்பா.

விருப்பொடு வெறுப்பு முருக்கின னாகித்
திருத்தகு வேத வுருக்க ளாகின்று
கைவினை குயிற்று மைவரை வென்று
ஒருமுன் றவித்து வுண்மைநிலை யொன்றிய
இருவர் பலருந் திசைதொறும் போந்து
மால்வரை பயந்த நீனிற வொருத்தியும்
பாற்கடற் பிறந்த பலர்புக ழுவளும்
மேற்படு கலையின் விதங்கொ ளணங்கையும்
யாறுரு வினராய் வீறுபெறப் புணரும்
துக்கித மோட்டுந் தக்கிணப் பிரயாகையாந்
தானங் குறுகித் தகுமுறை யாடிப்
பல்கரு மங்களும் பத்தியின் முற்றிப்
பொன்னினு மணியினும் புனைந்திய லொளிருநின்
புண்ணியச் சினகரம் புக்கு வலஞ்செயா
வாள்பட வீழ்ந்த வண்சினை மரம்போற்
சென்னி யிருநிலந் துன்ன வீழ்ந்து
வணங்கின ரெழுந்து நுணங்கிய வுடலர்
தலைமிசை யிருகரந் தாங்கிச் செம்பொன்
மலைமக டலைவ மான்மழுக் கரத்த

சங்கர நெடிய சதுமுக விச
எண்குண பண்ணவ விறைவ வெங்கோன்
சயம்பு வியல்குண சாரண சம்போ
புனித புராண போத மெய்ப்பொருள
அறிவ அறவ அனந்தரா மத்த
எனப்பல் லாற்றான் மனங்கொளப் பரவி
விழுப்பயன் கொள்ளும் பழிப்பில் சீர்த்திப்
பாடுமலி விழவின் கூடலை யாற்றார்
நிருத்தன மொய்ம்போய் நெறியறி வேனை
யலப்பெருங் கடலின் விலக்கி யெடுத்தே
அருட்சா கரத்தே மருட்கெடச் சேர்க்கும்
ஒருவரம் வேண்டினன் பருவலித் தடக்கை
யானையுரி போர்த்த வூனமி லுனையே. (௪)

## வெண்பா.

உன்னைக் கலைக ளொருவரு மென் றோதியே
என்னைப் பலவா யிபலழித்த—பின்னறிந்தேன்
றோடலையுங் காதினுப் சொற்ற சாதமவை
கூடலையாற் றாராய் குறி. (௫)

## கட்டளைக் கலித்துறை.

துறையே யிழைத்தனன் கோல்வளைப் பாங்கியான் கூறுகநீ
நறையே தழைத்த நளிர்மலர்க் காவி நெடுங்குழலாள்
மறையே யுருவான் மணவா ததனுன் மலிந்துறையப்
பொறையே தகுவதோ கூடலை யாற்றூர்ப் புரவலர்க்கே. (௬)

## ஆசிரியப்பா.

புரைகூர் மனனே புரைகூர் மனனே
நன்மதி யுரைப்ப நயந்து கேண்மதி
நன்னிலைப் படாத சின்னிலை மனனே
தக்கார்ப் பிழைத்தனை தருமம் மறந்தனை
பிறர்பொருள் வவ்வினை யறமனை முனிந்தாய்
பிறமனை [illegible]க்கனை மறுகிச் சுழன்றனை
பொய்ம்மொழி புகன்றனை மெய்ம்மொழி யகன்றனை
காமப் [illegible]ங்குழி மூழ்கிக் களித்தனை
வெம்மைக் [illegible]கொட்டி வேண்டினை பெரிதும்

இளமை வியந்தனை யாக்கை யோம்பினை
தேட்ட மகிழ்ந்தனை வீட்டினை பல்லுயிர்
கள்ளொடு சூதுங் கலந்தனை பொய்க்கரி
விள்ள லாயினை விரதம் பழித்தனை
செய்ந்நன்றி மறந்தனை தீயோர்ச் சார்ந்தனை
எல்லாம் வல்லவ னில்லை யென்றனை
புண்ணியம் பாவம் புகல்கதி நரக
முண்டெனக் கூறு முலகை வெறுத்தனை
கண்டதே காட்சி கொண்டதே கோல
முண்டதே போக முடம்பா லென்றனை
நித்தியா நித்திய வத்து வறிந்திலை
பொய்படு மகளிர் புணர்முலை நசையா
லந்தோ மனனே யல்லும் பகலுநீ
எண்ணு தனவெலா மெண்ணி யெண்ணியே
கணம்பல யுகமாக் கண்டுறுங் காறும்
வாடி யுழன்றனை வஞ்ச மியற்றினை
யுன்னின் மிக்கா ரொப்பா ருன்னலை
யிழிந்தா ரேத்தக் கழிந்தன வாயுள்

அதனால்,

பல்லூழி காலம் நல்வனம் புக்கு
வெல்லையி றவங்க ளியற்றினு மவான
நதிமுதற் பலவா நன்னீ ராடினும்
வீடெய்து மாறு கூடுவ தரிதால்

ஆதலின்,

செல்லுந் தேத்துக் குறுவினை கேணீ
கழனியிற் புதுநீர் கட்டுந ரோதையு
முழவர் கலிப்பு முழத்தியர் முழக்கமும்
வித்துநர் சும்மையும் விளங்கு கோவலர்
முல்லையங் குழலி னல்லிசைப் பெருக்கு
மாய்ச்சிய ரளைவிலைப் பேச்சி னொலியு
மந்தண ரருமறை மந்திர வகவலும்
பல்படை வீரர் பயிறரு மோதையும்

ஆவண வீதியின் மேவுந ரொலியும்
விரவின சென்று வெண்டிரைப் புணரியி
ஞர்ப்பை யவிக்கு மாப்புகழ் மூதூர்

அதுதான்,

ஏடவிழ் மரையி லெகினை மணஞ்செயும்
பீடமர் வாவிக் கூடலை யாற்றூர்

ஆங்கு,

விரைந்தனை யோடி வெண்ணதிப் பாங்கர்
மணிமுத் தாறு மணக்கு மிடந்தனிற்
றோய்ந்துவான் றோயந் தூகளற முடித்த
நிர்த்தன வல்லபன் பொற்றளி புக்கு
வலம்பல வந்து நிலம்பட வணங்கி
தொண்டர் நாத வண்டமிழ்ப் புலவ
செழுமதி யணிந்தோய் தீன பந்துவே
வேதப் பொருளே வினையி னீங்கியோய்
ஓதுதற் கரியோ யுனக்கிணை யில்லோய்
எனப்பல வியம்பி யிகவா வன்புடன்
வதிவையே யுனக்கு வான்பத னிலையே. (௭)

## வெண்பா.

நிலவுலக மெல்லா நெறியிற் படைத்தோன்
கலைமக ளோடுங் கருது—நிலைத்தவத்தாற்
கூடலையாற் றூரிற் குனித்தல்கண் டேயுய்ந்தான்
ஆடகத்தின் மன்றநடித் தாங்கு. (௮)

## கட்டளைக்கலித்துறை.

ஆனந்த வெள்ளத் தழுந்தவெண் ணுமை லனுதினமும்
மானந்த நோக்கின் மகளிர்த மின்ப மகிழ்ந்துநின்றேன்
றூனந் தமில்லாத் தமிழ்முனி பூசை தனக்களித்த
தேனந்து கூடலை யாற்றூ ருறைதரு தேசினனே. (௯)

## ஆசிரியப்பா.

தேவர் கோன்றன் மேவருஞ் சிறப்பு
மேனைய விறைவர் மானப் பதங்களு
மலர்க்கணை மார னுலப்பி னலனும்

வலிதே வரினு நலிதரு மிவையென
வேண்டலர் மாண்ட விழுமி யோரே
யானே,
பெரும்பொரு ளாசையாற் கருந்தா தனைய
நெஞ்சின ருறீஇக் கெஞ்சின னின்று
மிசைய ரிருந்துழி யிருந்து மறியா
வுலைபனை யுயர்ந்த வோரெழு வண்மைப்
பெருமக்களெனத் திருந்தப் பேசியும்
வீரர் புகழ்சொல வாருயிர் சோரும்
பேடரை வீமப் பெருவலி யோரெனச்
சாற்றி வஞ்சரைச் சாதுக்க ளென்றும்
வனப்பொரு சிறிதும் வாய்ந்திடா தாரை
மனச ரென்னத் தினந்தொறு முரைத்துந்
திரிந்தன னல்லாற் பெரும்பொருள் பெற்றிலென்
ஆதலால்,
உருகெழு சிறப்பின் றிருவிழை நகராங்
கூடலை யாற்றூர்க் கோவே யென்ற
னிலம்பா டொழித்து யாவதும் வெஃகா
வுளந்தரல் வேண்டு முத்தம வெளியே. (௧௦)

## வெண்பா.

வெள்ளைக் கிரியாய் விளங்க ரவப்பூணுப்
வள்ளற் பெரும வளரமுத—வெண்மணிமுத்
தாறுவந் தோவேறே யாதுவந்தோ கூடலை
யாறுவந்தா யானறியச் சொல். (௧௧)

## கட்டளைக் கலித்துறை.

சொல்லார் வயற்கூ டலையா றுவந்த துணைவனகம்
பொல்லா தவிந்தப் புரைசெய் யுமாலைப் பொழுதுகண்டும்
எல்லா மவனாக வெண்ணி யுளேன்பா லிரங்கலையாற்
கல்லோ விரும்போ கழறுக சேடி கடிதிவணே. (௧௨)

## ஆசிரியப்பா.

கடிமறை தந்த முடிநான் கவன்றன்
றொல்வழிப் போந்த பல்கலைக் குரிசிலாங்

காத்தி யாயனன் வாய்த்திடுங் கல்வி
காத்தல் காணாக் காலம் பலவாய்ப்
புன்கணோக் காது நன்கனம் பயின்று
கைவருங் காதற் றெய்வ மொழிக்கலைப்
பயிற்சி குன்றப் பழவினை தானோ
பிறிதோ வேறு தெரித லில்லை
னெனநனி யாற்றி மனநிலை மாறி
விண்டல மொரீஇ மண்டலம் புகாஅ
முல்லையு மருதமு நல்லியல் புற்றுக்
கானமுங் கழனியுங் கரும்புஞ் செந்நெலும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் சூழவோங்கிய
கூடலை யாற்றார் நேடின னடைந்து
வுலகெலா மேத்திய பொலன்புன லாடி
கோட்டங் குறுகி நாட்டமூன் றுடையோய்
மாமறை பயந்த தோமறு மணியே
மையறு சிறப்பின் வானவ ருயிரே
கங்கைவே ணியனே மங்கைபா கத்தோய்
கலைக்கண மெற்கோர் நிலைக்கண மாகிப்
புலமுற வருளெனப் பல்பக றுறித்துப்
பெற்றன னன்றே கற்றையஞ் சடையோய்

யானும்,

அவ்வழிப் படர்ந்து அரும்புன லாடி
இம்மையொ டுமைக்கு மின்பம் பயக்கு
மேதகு வித்தை போதவே யடையத்
திருவரு ளீகுதி தெய்வத மணியே. (௧௩)

## வெண்பா.

மணிவா சகம்வேட் டோமாப் பிட்டு வேட்டோ
அணிமண் சுமந்தடியும் பட்டாய்—கணிகூ
டலையா றுடையா யவையென் னகத்திற்
றொலையா வியற்றுஞ் சுகம். (௧௪)

## கட்டளைக் கலித்துறை.

சுணங்குற்ற கொங்கைத் துணைவி துணையின் றுறைந்திடுமக்
கணங்கற்ப மாகக் கழிக்கின் றனளாற் கருதுமென
வணங்குற் றசுக வருந்துணை யீர்நீ ரதிவிரைவிற்
குணம்பெற்ற கூடலை யாற்றுறை கோவுக் குரையுமினே. கரு

## ஆசிரியப்பா.

உவரி மண்ணகத் துறுபல யோனிகள்
பிழைத்து மானிடம் பெறுத லரிதே
கானவர் குறும்ப ரானவ ரிடமொரீஇத்
தீம்புன னாட்டிற் செனித்த லரிதே
படிகடற் பரதவ ரடியில் வேடரா
மிழிகுலம் பலவு மெய்த லொழிந்து
நல்ல தொல்குலம் புல்லுத லரிதே
கருங்குழன் மாதர் மருங்கிற் சுற்று
முருவின் மிக்க வுடம்புற லரிதே
பல்பொருள் வருகை செல்கை யுணர்த்துங்
கல்வி கேள்வி கலந்திட லரிதே
மான முடையராய் மாண்மனை புல்லித்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிதே
இங்ஙன மாகத் துங்கமா னிடத்தை
யெய்தினை மனனே யிருஞ்சுரர் பரவ
வானூர் மதியம் வளர்சடை வைத்துக்
கூடலை யாற்றூ ராங்குல நலத்திற்
கோயில் கொண்ட தாயினைத் தந்தையை
யெள்ளா வன்புட னுள்ளிருட் பகலும்
பாடிப் பணியே னாடிலை யென்னே. (கசு)

## வெண்பா.

என்னைப் படைத்தா னியலடிய னாக்கொண்டா
யுன்னருட்குங் கைம்மா றுளதேயோ—பொன்னவையிற்
கூடலையாற் றூரிற் குலநடனஞ் செய்தாயென்
வேடன் விழுமம் விலக்கு. (கஎ)

## கட்டளைக் கலித்துறை.

விலங்கலை மான வெருண்டடந் தகன்வந்த வேளையிலே
மலங்கிய பார்ப்பனப் பிள்ளைக் குறுகளி வந்திடவே
கலங்கலை யென்னக் கடிமலர்ப் பாதக் கடைவிரலாற்
குலைந்திட வெற்றிய கூடலை யாற்றூர்க் குருமணியே. (௧௮)

## ஆசிரியப்பா

சூடவளைக் குலங்க டடமணி யினுந்
தொடுகட லன்ன முடங்கொ ளகழியும்
வெங்கதிர்ப் பரிதியொடு திங்களுஞ் செல்வர்
தங்கதி மறைத்த பொங்குபே ரெயிலுந்
திறங்கொ ளரணு மறங்கொள் பொறிகளு
முகிற்குல முறங்கு மகிற்புகை மாடமும்
பண்ணுறப் பாடு மெண்ணுறு மறையோ
ரெண்ணெண் கலைதெரி மண்சுரர் வீதியும்
போர்முகம் பெறாஅ சீர்முகம் வாடு
மேருறு மன்னர் பேருறு மறுகும்
யாண்டு முள்ள வேண்டும் பொருட்களைக்
காலினுங் கலத்தினுஞ் சாலவுந் தந்துறு
வசைதெரி வறியா வளந்தலை மயங்கிய
அரைசரு மருளு மங்காடி வீதியும்
தாளாண் மைமிகு வேளாண் டெருவும்
பல்வேறு மாக்க ணல்வேறு வீதியும்
மாலைபாய்ப் பொலியு மாலவாய்ப் பதிக்கண்
முட்டாச் சிறப்பின் முதியோர் வழுத்துங்
கூடலை யாற்றூர்க் கொற்றவ நீயே
ஆடலோ டெட்டெட் டருளினை யாதலி
னெங்கு நிறைகின்ற புங்கப் பொருளெனச்
சங்கையற வுணர்ந்தேன் மங்கை பாகனே. (௧௯)

## வெண்பா.

பாகுஞ் சுவைகெடும் பத்தி யொடுநாமம்
வாகுறவே சொற்றால் வடுமனனே—யாகுலந்
ளோட மலமோடு முன்ச லனமோடும்
கூடலையாற் றானைக் குறித்து. (௨௦)

## கட்டளைக் கலித்துறை.

குறித்தே பணிந்திலன் கூடலை யாறூர் கொழுமணியே
மறித்தும் பிறந்து மரிக்கும் வகையே மகிழ்ந்தனனாற்
பறித்த வலையிடைப் போந்த செழும்பொருட் பண்பினின்றாய்
வெறித்த புலவர் வெறுமைச் சாங்கெட வித்தகனே. (உக)

## ஆசிரியப்பா.

விண்ணவர் மண்ணவர் விழுமந் துடைக்கு
நீர்தொலை வற்ற தேவர்நனி பழுத்த
காவிரி புரக்கு மாபுன னாட்டில்
வழங்கி னுந்தவா வளங்கெழு காழிப்
பதியினில் வைதிகப் பார்ப்பன ராய
சிவபாத விருதயர் செய்தவப் பயனாய்
பகவதி யார்தம் மகமகிழ் தூங்க
ஞானில மேனிலை நயந்துவாழ்த் தெடுப்பத்
திருவவ தரித்த வருந்தமி ழாகரற்
ககளை மூன்றி லத்திருப் பதியின்
மேனை புதல்வி ஞானவமு தளித்துந்
திருக்கற வாட்டுந் திருக்கோலக் காவிற்
கற்றவர் போற்றப் பொற்றாள நல்கியும்
கருவறத் துடைக்குந் திருவாத் துறையின்
முத்தின் றெழிற்கள் முற்றிய யானமுங்
குடையுஞ் சின்னமு மடைவுட னீந்தும்
வாச்சியங் கறங்கும் பாச்சிலாச் சிரமக்
கொல்லி மழவன் செல்வப் புதல்வியின்
முயலக நோயை வியனமர் பதிகஞ்
சிறக்க வேற்று விறக்க வருளியுந்
திருக்கொடி மாடச் செங்குன் றூரி
லடியவ ராதியர் சுரத்தை யகற்றியும்
பட்டீச் சுரத்திற் பந்த ருதவியு
மாவடு துறையி லையர்வேள் விக்குக்
கேட்ட பொன்னி னீட்டந் தந்தும்
மருகலி னரவான் மாண்டநாய் கற்கு
அரிதினு மரிய பெருவுயி ரளித்தும்

விழி மிழலையிற் பாழ்ங்கருப் பகல
பாரோ ருவக்கப் படிக்காசு நல்கியும்
வேத வனத்தனி வியன்கத வங்கள்
திறக்கக் கவிக்கச் சிறக்க வியப்பியுஞ்
செந்தமிழ் வளர்த்த பஞ்சவன் கூடலில்
மங்கையர்க் கரசியுந் தங்குலச் சிறையு
மிரும்பூ தெய்த வியலறு சமணப்
பதக ரொழியப் பல்வா மாற்றியுங்
கொள்ளம் பூதூர் வெள்ளம் போக்கக்
கொட்டமே கமழும் பாட்டுகள் பெற்றும்
போதி மங்கையின் புத்த நந்திதன்
சிரமிடி கொளளத் திருவுள முற்றும்
ஆண்பனை பெண்பனை யாக வருளியும்
மயிலையி னென்பை மங்கை யாக்கியும்
பாரா வாரப் பாரோ ருய்யக்
கன்னித் தமிழினிற் சொன்னய மாதியா
நன்னயஞ் சார்ந்த பொன்மறை யருளியும்
நல்லூர்ப் பெருமண நற்பதித் திருமுன்
வதுவைக் கோலங் காணிய வந்த
பலமாக் களொடும் பாகதி சென்றும்
மற்று மளவில கொற்ற முற்றியும
நீயே யவனு யவனே நீயாய்
நின்றரு ளாடலை மன்ற வகத்துள்
நினைதொறும் நினைதொறும் வினையெலா மவிந்து
சொற்றடு மாறிப் பற்றற விட்டு
நெஞ்சநெக் குருகி நிற்ற லல்லது
யானெனம் பணிக்கே னியற்றுவ தறியேன்
வடிவுடை மழுவோய் கொடியிடை பாக
கூடலை யாற்றி யுடிடுங் கோவே. (உ_உ)

## வெண்பா.

ஏதமனப் பேயே யியம்புவன கொள்ளிலையால்
மாதர் முலைவேட்டாய் மாள்வதற்கே—போதர்க்கா

யாடரவம் பூண்டா னனவரதந் தாண்டவஞ்செய்
கூடலையா றுன்னு குணம். (உ௬)

## கட்டளைக் கலித்துறை.

குணமே மணந்த குயின்மொழி வஞ்சிக் கொழுங்கொடிக்குத்
துணையிலை யென்பது கொண்டந்த வேடன் சுடுசரங்கள்
கணந்தொறு நூறாய்க் கடத்தின னென்னக் கரும்பொழில்க
ளிணைந்திடு கூடலை யாற்றுறை வன்செவிக் கேற்றுமினே. ()

## ஆசிரியப்பா.

மின்றிகழ் விசும்பி னன்னீர் பெருகிய
பெண்ணை மாநதி பண்ணையிற் சூழுந்
திருமுனைப் பாடியாந் திகழ்நன் னாட்டிற்
றிருவா மூரின் வருவே ளாண்குலப்
புண்ணியப் புகழனா ரெண்டலப் பயனாய்
மேதினி மதிக்கு மாதினி மாதின்
றிருவயி றுதித்த திலக வதியின்
பின்னாய்ப் பிறந்த சொன்மரு ணீக்கியார்
சமண்மத மெச்சிச் சார்ந்தனர் வதிய
முன்னோ ளதிகை முன்னவர்ப் போற்றி
யெம்பியுன் றொண்டனு மின்னரு டருகெனப்
பவள மேனியிற் றவளநீ றணிவான்
தவப்பெருஞ் சூலையி னவப்பெருந் தழியாம்
பொய்ச்சமண் போக்கி மெய்ச்சைவ ராக்கி
நாவுக் கரசென நாமமு நல்கிடப்
பெற்றனர் சூலப் பெற்ற விலச்சினை
தூங்கானை மாடத் தோங்கப் பெற்றுந்
திருநல் லூரிற் றேவர்க் கரிய
மணமல ரடியைச் சிரமுற வடைந்துந்
திங்களூர்த் தொண்டராஞ் செல்வவப் பூதியி
னாவந் தீண்டிய திருமகற் றந்தும்
மிழலையிற் காசு வழுவற வேற்றும்
மறைப்பதிக் கதவந் திறக்கப் பாடியும்
பைஞ்ஞீ லிக்குப் படர்வழி பசியட
பகவன் மறையோன் படிவின னாகித்

திருவமு தீந்து தீம்புனற் பொய்கையு
நளிர்மரச் சோலையு நல்கிடப் பெற்றும்
ஓத வுலவா வுத்தமச் சிறப்பின்
கைலையைக் காணுங் காதலிற் செல்ல
அரவா பரணா வந்தண னாகி
நெறியிடைக் குறுகியுன் னினைவுரை யெனக்கேட்
டிப்பெரு வாவியி னிறங்கியா டென்ன
வாடின னெழுமிட மையா றதனைக்
கைலையா வணங்கியுங் கவின்பூந் துருத்தியிற்
காழியர் கோன்வர மேழியர் பெருமான்
யானஞ் சுமக்க ஞானசம் பந்தர்
விளைந்தன வீழ்ந்திட மிகுபத் தியராய்
வணங்கவே தியரும் வணங்கப் பெற்றும்
பூம்புக லூரிற் புராந்தகன் கோயிலி
லுழவா ரப்பணி யுஞற்றிடு மமையம்
பொன்னு மணியுந் துன்னின வற்றை
மண்ணொடு கல்லென மனத்தின் மதித்தும்
எம்பிரா னேய வும்பரார் மாதரு
நாண வவர்தமை நயவா தொருவியும்
பாண்டரங் கன்றன் பதிதொறுஞ் சென்று
மாண்டமி ழாந்திருத் தாண்டகத் தொடுபிற
சிலையுங் கரைவுறு நிலையதாய்ச் செப்பியும்
இன்னன வியற்றியு மீறிலின் பத்து
வான்பதந் தோய்ந்த வண்மையா னெஞ்சே
சங்கர னடியர்க் கன்புசெய் துவந்து
மிங்கிதந் தொண்ட ரீசற் காற்றலும்
வான்முறை யுணர்ந்து வாமதே வன்ற
னாலயந் தொழுவது சாலவு நன்றாம்
ஆதலின்,
மறைவழி வேதியர் நிறைவுறக் குயிற்றும்
வேள்வியி னெழுந்த நீள்புகை காணூ
மங்கு லென்ன மஞ்ஞைக ளாடுங்
கூடலை யாற்றூர்க் கொழும்பதி குறுகி
ஆடல்வல் லானைப் பாடிநீ பணியே. (௨௫)

### வெண்பா.

பனிப்பங் கயனைப் படைத்தளித்தாய் மாலாய்
தனிச்சங் கரனாய்த் தலங்க—டனிப்படுத்தாய்
ஆமா வமுத மணிகூ டலையாறு
போமா றெனக்குப் புகல். (உசு)

### கட்டளைக்கலித்துறை.

புகலேது மில்லேன் பொருளறி யேனைப் புரந்தருள்வா
யகலாத வன்பி னறுமுக வேளை யமாருறு
விகலான சூர னெமன்னக ரேற வினிதளித்தாய்
நகமாது வந்திடக் கூடலையாற்றி னடிப்பவனே. (உஎ)

### ஆசிரியப்பா.

நல்லுல குவப்பத் தொல்வளம் பழுநிய
நந்திமால் வயினி னந்தண் சாரலின்
வானம் வழங்கிய வளநீர் முத்தின்
ஆர மெனப் பல்லருவியாய்ப் பெருகி
கண்ணிற் சிறந்த பெண்ணைப் பெயரி
னதியுரு வாகிப் புதுமலர் முதலாக்
கல்லினுங் கானினும் புல்லும் வளன்கொடு
பண்ணையிற் சேர்க்கும் பலர்புகழ் மூதூர்
இருமுனைப் பாடியா மொருபெரு நாட்டி
லாவிபல மொய்த்த நாவலூ ரதனி
லாதி சைவ வந்தணர் குலத்தில்
சடையா னுயர்ந்த சடைய னார்தந்
தான தவத்தான் ஞானியா ரகட்டில்
நன்மையிற் றோன்றிய நம்பியா ரூரனை
வெண்ணைப் பதியி னண்ணியாட் கொண்டு
வன்றொண்ட நாமம் வழங்கி யருளினை
அதிகையி னடிகளை யவர்சிரம் வைத்தாய்
ஆரூ ரிற்பே ரன்பனாய் மொழிந்தாய்
முறையிற் றேங்கிய பரவை மாதின்
தூதலம் வேட்டவர் தூதனு மாயினை
கோளிலி யூரிற் குண்டையூர்க் கிழார்தரு
நென்மலை பரவை நினைப்பிற் சேர்த்தனை

## மும்மணிக்கோவை.

திருப்புக லூரி னுருத்திகழ் பாவைக்
கரும்பொருள் வேண்ட வாண்டுள செங்கல்
ஆடக மாக்கிப் பீடுற வளித்தனை
பாச்சிலாச் சிரமப் பதிக்கணு மீந்தாய்
முதுகுன் றுறுவான் முன்னின ரேகிய
வாற்றிடை வேடிய ரேற்ற வருக்கொடு
விளித்தனை கொண்டுன் வியன்றளி புகுத்தி
வடிவுடை யென்னும் வண்டமிழ்ப் பதிக
மேற்று யன்றியு மின்முது குன்றின்
பொன்பனீ ராயிரம் போற்றக் கொடுத்தவை
மணிமுத் தாற்றி னணிபெற விடுவித்
தாரூர்க் கமல வாவியிற் றந்தனை
குருகா வூரிற் பெருங்கச் சூரில்
வண்ணமறை யோரு யன்ன நீர்நிழல்
சுந்தர ராகியர் சோர்வற வளித்தாய்
காந்தன் றளியிலுங் காஞ்சன மீந்தாய்
ஒற்றியூர் வேளா ளுயர்குலச் சங்கிலி
மாதிடந் தூதாய் மணம்புரி வித்தனை
நிற்பிரி யேனெனச் சொற்றரு ணீக்கி
புறஞ்செலப் பார்வை மறைந்தகற் கழுங்கக்
கச்சியே கத்தினுங் கமலைப் பதியினு
நோக்க மிரண்டு நோவற வருளினை
சங்கிலியார் லின்பதை யுணர்ந்த
பரவை யெய்திய சிறுமுனி வாற்றினை
திருப்பெரு மங்கலத் திருவருட் டொண்டராம்
ஏயர்கோமன மிரங்கின ராகி
எந்தயா நிதியை யேழை மாதற்பாற்
சுந்தர வனுப்பிய சுந்தரற் காண்டல்
விழுமிய தன்றென வெகுண்டன ரிருக்க
இறைவநீ யவர்பா லிருஞ்சூலை யேவி
நம்பியா ரூரனை நட்டா லிலதென
ஓதியுஞ் சுந்தர ருறவேண் டார்பால்
ஆரூரைத் தானனுப்பிய தோராக்
குறும்பிடிக் குயிரைக் கொடுத்தனர் கிடந்த

கலிக்காமனுரை யலக்க வெழுப்பி
இருவரும் புணரு மருவினை புரிந்தாய்
நாகையம் பதியி னலனூ ரற்குப்
பொன்னொடு மணிகலன் பொலன்றா சளித்துப்
பரியொடு சுரிகையும் பண்பி னல்கினாய்
கண்டியூர் தன்னிற் காவிரி நீத்தம்
மண்டின தொடுங்க வண்டமிழ் பாட
இருபிரி வாக்கி யிபனெறி குறித்தாய்
முருகன் பூண்டியின் முடிமன்ன னீந்த
கடுவினைக் கள்வர் கைக்கொட் பட்ட
பெரும்பொருள் மீட்டும் பெட்புற வளித்தாய்
புக்கொளி யூரி னிடங்கர்வாய் புக்க
வேதியன் மகனை வியக்கத் தந்தனை
அஞ்சைக் களத்தி னைராவத மிசை
அஞ்சொற் றமிழ்மறை யணைந்த மருளிய
சேரமான் பெருமைச் சிறக்கக் கொடுபோய்
என்றும் பொன்று வியல்பதத் திட்டாய்

அதனால்,

கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
தவப்பய னனைய தாவில் விழுச்சீர்க்
கூடலை யாற்றிற் குவலய முய்ய
நாடகஞ் செய்வோய் நாயினுங் கடையேன்
அடியவர்க் கெளிய னைவனு மறிந்தேன்
நச்சுவார் நச்சுவ நல்குவ னுணர்ந்தேன்
அனைத்தும் வல்ல வதிசயந் தெரிந்தேன்
பைந்தமிழ்ப் பதிகப் பயனுந் தேர்ந்தேன்

ஆதலின்,

எளியே னுன்ற னிணைச்சரோ ருகப்பதம்
நாளுந் துதிக்கு நசையின னாகவும்
மனமொரு நெறியின் மன்னிற் றில்லையால்
மற்றதன் சலன மாற்றிடல் வேண்டும்
பல்வகைத் தோற்றத் தெவ்வகைப் பிறப்பும்
பிறந்திறந் திளைத்துப் பேதுற லஞ்சினன்

இனிப்பிற வாதே பியற்றுதல் வேண்டும்
கற்றுத் துறைபோய் நற்றவ மிழைத்து
உண்மைநிலை கண்டு வுரவோர் போல
வரங்கள் வேண்டினன் வண்புக ழோயவை
பெருநகை விளைக்கும் பெற்றிய வேனும்
தாழா தளிப்பாய் தனிமுதற் றேவே. (௨௮)

## வெண்பா.

ஏமம் புதல்வரோ டில்லா ளிவையெலா
மேம முறும்போ தியற்றுவதென் — றேமே
பணைக்கூ டலையாற்றிற் பாருப்ப வாடுந்
துணைவன் றுணைத்தா டொழு. (௨௯)

## கட்டளைக்கலித்துறை.

தொழுந்தகை மேலவர் சொற்றமிழ் மாலை துணைபடிக்கு
விழுந்தகை யாகவும் வெற்றுரை மாலை விளம்பினன்யான்
செழுந்தகை நிர்த்தன வல்லவ சோலை யாற்றவனே
வழுந்தகைத் தேனு வரையா தவப்பாய் வளர்திருவே. (௩0)

## திருக்கூடலையாற்றூர்
## மும்மணிக்கோவை
முற்றிற்று.

---

## அரங்கேறிய காலமுதலியன.
### ஆசிரியப்பா.

ஆங்கலி யூழியி னையா யிரத்துப்
பத்தொடைந்தாய்ப் பகரு மாண்டி
னண்ணுங் கன்னி நன்மதி பதனி
லிசைபிரு விருபா னென்னில் விசய
தெசமியிற் றில்லைச் செந்தமிழ்க் கழகத்துத்
தில்லை நாயகச் செந்தமிழ்க் குரிசி
லவைதனக் கேன்ற தலைவ னாக
விற்றா, லாக்கிய மறையோ னைவ நல்லூர்ச்
சினி வாச னென்னுஞ் செம்ம
லன்பி னிறைவா னரங்கேற் றினனே.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

ஓம்

ஸ்ரீ வேங்கடேசாய நம:

# திருவேங்கட
# மும்மணிக் கோவை.

ஆக்கியோன்:—

கலியமலை

ந. சந்திரசேகர நாயகன்.

சிதம்பரம்

"விநாயகசுந்தரவிலாசம் பிரஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

10—2—17

ஓம்

ஸ்ரீ வேங்கடேசாயநம:

# திருவேங்கட
# மும்மணிக் கோவை.

இது

சிதம்பரத்தைச் சார்ந்த

கலியமலை

ந. சந்திரசேகர நாயகரால்

இயற்றப்பட்டு

கூளப்பாடி

அ. வீ. கோவிந்தசாமிப்படையாட்சியாரால்

சிதம்பரம்.

விநாயகசுந்தரவிலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

10—2—17.

ஓம்
ஸ்ரீ வேங்கடேசாயநம:

# சிறப்புப் பாயிரங்கள்.

புவனகிரி
ஸ்ரீமத் அழகியமணவாளராமானுஜஏகாங்கிசுவாமிகள்
இயற்றிய
பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூமேவுமாதவன்பொன்னடியிறைஞ்சுவோன்
புகழ்நாதமுநியாமுனைப்
புனிதநற்குரவர்பொலிவீரநாராயண
புரத்தேரியகம்மூலையிற்
காமேவுகலியமலைநல்லதம்பிப்பெயர்க்
காவலோனீன்றபுதல்வன்
கலைவலோனைவநல்லூர்ச்சீநிவாசனுங்
கருதுகுணவேதியன்கண்
பாமேவுசங்கமதுபரவுந்தனித்தமிழ்ப்
பனுவல்பயின்றுணர்ந்தோன்
பார்மிசைச்சந்த்ரசாகரனென்னுநாமன்*முப்
பருவத்துமன்புமிக்கோன்
தேமேவுமலர்நித்தர்சிந்துதிருவேங்கடத்
தெழின்மும்மணிக்கோவைநூல்
செய்தனன்புலவர்மகிழெய்தநன்னிலனில்வினை
செய்தநன்கெய்தனனரோ.

தெ. விருதாங்கநல்லூர்
ஸ்ரீமத் ந. சுப்பராயப்பிள்ளை இயற்றிய
எழுசீராசிரியவிருத்தம்.

மருவரு துளவ மலர்த்திருவேங் கடத்தின் மகிழுல கருள்பர மன்றுள்
ஒருவரு மாற்றைக் கடிந்திடு மெனவே கழறினன் மும்மணிக் கோவை
பொருவரு புலமை யடியவர்ப்பழிச்சும் புரையறு கல்விதேர் வாழ்க்கைத்
திருவரு சந்த்ர சேகர னெனுமோர் செகமமர் சீர்த்தியன் மாதோ.

---

* முப்பருவம் பகவத், பாகவத, ஆசாரிய விஷயம்.

மாயூரத்தைச் சார்ந்த ஐவநல்லூர் பிச்சுவையரவர்கள்
குமாரர் பிரம்மஸ்ரீ
ஸ்ரீநிவாஸையரவர்கள் இயற்றிய

கட்டளைக்கலித்துறை.

வளமலி வேத வடவேங் கடத்தான் மகிழ்ந்தருள
வளமலி யன்பினன் மும்மணிக் கோவை யுரைத்தனனாற்
களமலி நஞ்சனைக் கார்வண்ண னென்னக் கருதிடுவோன்
வளமலி வண்டமிழ் தேர்சந்த்ர சேகர வண்மையனே.

சிறப்புப்பாயிரம்
முற்றிற்று.

ஓம்

ஸ்ரீ வேங்கடேசாயநம:

# திருவேங்கட

# மும்மணிக்கோவை.

## நம்மாழ்வார் வணக்கம்.

வேதந் தமிழ்செய்த மாறன் திருக்குருகூர்
நாதன் பாதந்துணையா நன்றுமால்—மாதன்
மருமத்தான் வேங்கடவன் வள்ளல்கா ரன்ன
வுருவத்தான் பாடற் குவந்து.

## உடையவர் வணக்கம்.

பெரும்பூதூர் வந்த பெருமானே பெற்ற
வரும்பே றெவர்க்கு மளித்தா—யிருங்கருணை
மூர்த்தியே வேங்கடத்தான் மும்மைமணிக்கோவை
கீர்த்தி யுரைப்பார் கிளர்ந்து.

## நூல்

### ஆசிரியப்பா.

திருமுடி நாலவன் பழுதொரீஇ யளித்த
துணைசெல வெழிலி வினைசெல வடர்க்கும்
வளிபொரு கனைதிரை வளைஇய சான்ற
தோன்றரு வைய நாப்ப ணொன்றியும்
பளகில் வடவரைப் பலவலஞ் செய்யு
முதுமொழி திறம்பா முதறி வினைஞர்
நலப்புரி கோளி ஞானி பழிச்ச
வான்புதை திமிரம் வலிபெயர்ந் தேகச்
செங்கதிர் வீசிய தங்கொளி ஞாயிறின்

வெள்ளிகிரி பெயர்ந்தென வெண்பெருந் தோற்றத்
தீரிரு மருப்பிற் போர்வினை நவின்ற
வொருபெரும் பூட்கை யெருத்த மேறிக்
கைத்தோர் முறுக்கிய நெய்த்தோர் வேற்கை
முருகறிந் தளித்த முக்கட் பரம
னறைவிரி கடுக்கை நாண்மலர் நச்சிய
பறைமுடி சிறக்கப் பரவிய வொளிரு
மந்தி யாரணத் தன்புடன் வழிபடூஉங்
கலைசிறந் தோங்கிய கறைதீர் மதியிற்
பனிமுதிர் கவிகை நனிசிறந் தெடுக்கப்
புனைத னசையாப் பொய்கூர் மருங்குற்
பல்லவஞ் சான்ற பாசொளி துறுமிய
தோயாக் கோபச் சாயாப் பூந்துகில்
வாலரின் மாலை சோலிய வைம்பா
னரையணங் கெதிர்ந்து சிறையணங் கெதிரிய
வரையரை நிமிர்ந்த வணங்கா நோன்முலை
முன்னாண் மதியின் வின்னுதன் மடந்தை
மிசைவீ ழுருவி விசைகுதி டான
தூமக் கவரி வாமத் திரட்ட
புரிமுருக் கிரா வரிபுகன் றிருந்த
பாவியன் முளரிக் காவியன் மான
விமையா நாட்ட மீரைஞ் ஞூறும்
பொலியக் கடவிய புரவலன் முதலா
சேண்விளங் கியற்கைப் பாண்மலி தெய்வக்
குழூஉப்பல பணித்துக் கூப்பிய கையின
ரோசையிற் சிவணி யாசையிற் பொலிந்து
பெருகிய பூதப் பெட்பது மாகி
யதுவிது வுதுவா யல்லது மாகி
சேய்த்தா யணித்தாய்ச் செம்மைய தாகி
வணமலி வாகிக் கணநிறை வாகி
யறிதெரி பொருளா யருகிய பொருளாய்த்
தலைகடை யொருவிய தானு மஃதுப்பல
பரசுவார் பனிப்பிருட் பருவலி தொலைச்சி

தன்மை பலட்கல் தருக்கினை வீட்டி
சலம்புணர் கிளாது மலர்ந்தாலை போக்கிய
தொலையா வாய்மை நிலையா வெருளி
ஐந்தி னகற்சி சிந்தையிற் செல்லா
[illegible]ன்புத னிலைஇய வையறி முதியோர்
நினைந்த வடிவிற் றுனைந்து செல்லுங்
கோலிடை யறியாக் கொழுநெறி பிறங்கத்
தடவிய பொருளிற் படரிய நிமிர்ந்த
துயலாத் தோற்றத் தயார வளத்துக்
காணிய வடையாக் கட்குறு மின்ப
வேங்கடப் பிறங்கல் வியனரு டழைக்கும்
பச்சை வண்ணத் தச்சுத நினது
புஞ்சக் கமழ்தெரி யஞ்சிறைத் தும்பி
பிரசக் களிப்பிற் பீடுற முரலு
முண்டகக் கழலை முறையடி யேற்குப்
பீடொன் றிடுவான் பொரிதீந் தருளே. (க)

## வெண்பா.

ஏடரவத் தாடுமலைப் பாடுதிரை யேன்கடைந்தாய்
பீடுமலி வேங்கடத்திற் பேரளியோய்—வாடுமிடை
திங்க ளுமிழ்கனலிற் றீய்ந்தாள் பழிநினக்கே
பங்கமுற வேநவிலும் பார். (உ)

## கட்டளைக் கலித்துறை.

பாரணங் காகிய பாயிருட் கங்குற் பகையென்னதாம்
வாரணஞ் சூழ்திரு வேங்கட மேவிய வள்ளலொரு
காரணன் கோடி பரிதிகண் டன்ன கதிர்விரியும்
போரணுஞ் சோதிபொன் னாழியொன் றேசெலும்
புக்கொழியே. [௩]

## ஆசிரியப்பா.

ஒலிமலி யோம்பிய நளியிறை கலித்த
கழுநீர் மாய்த்த பவளக் கடறு

வானெடுந் தசைந்த வெண்மை கடுப்ப
விருறாங் கிருந்த திருவிருஞ் சேட்டு
அறுபதம் பாண்செய் புரிவர வேணி
நயந்த காதலர்த் தணந்தவொண்டொடி
வெறித்த காமத் திறுத்தல் செய்ம்மார்
தடத்த கமலங் கடத்த தாகக்
குடத்த வாம்பல் வெடித்த தாக
விழுமே வினைகமழ் புரிமூன் றுடுத்த
பூதலக் கடவுளர் காதலி னீர்விட
விறும்பூ திருந்த நறும்பூஞ் சேக்கைப்
பெரும்புள் ளார்த்துப் பெயர்பு போங்க
நறும்புல் கல்லாக் குறும்பல் வினைஞர்
கோலெடுத்தனர் மாறுரப்பிட
வினைபுரி கம்மியர் மனைதொறு மறுக
குடாஅர்த்த களிறு படாஅத்தி னிமிர்ந்த
வெயிற்கதி ரழுவட் பயிர்ப்பது மழுங்கிய
செக்கர் மேனி யக்குறு கண்டம்
தெய்வங் கமழ மைவிதிர்த் திரியு
மலையர சுயிர்த்த விரசுபூங் கதுப்பிற்
செய்தவி ருருப்பல செவ்விதின் முடிந்த
முதிர்கலை மதியி னவிர்கலை சேர்த்திய
குழையெதிர் நடந்த நுழைவேற் கண்ணி
பாகந் தந்த வாகத் திறையும்
மைந்துபெரி தான்ற சிந்து முகிற்கிறை
பாசிய வேண்ட முரசியன் முழுநீர்
குறுவுழுந் தளவிற் சிறுபொழு தருந்திய
வுணராச் செருக்கி வணரா தோங்கு
மொருபெரு விண்டின் பருவலி யிகந்த
கமழுமிழ் படரம் பழுகிறை சிறுவெளி
தென்பொதி யருளிய தொன்முது கடவுட்
பின்னரெண் சிறந்த மன்பெருண் முதியோர்
மணிபல வெறியா துணிகணத் தசையா
சொட்டவுங் காட்டவு நாட்டவுந் தழீஇ

நாடிருந் துழியெலாங் காடுநனி சிறக்க
காடிருந் துழியெலா நாடுநனி சிறக்க
புதுநீர் விழவிற் பறைகலித் தோங்க
வார்கலிக் கிவர்ந்த மேந்தோன்று வரிசையின்
காற்றே யெதிராக் கடுக்கலித் தெழுந்த
கைதவ மிழந்த மெய்சிவண் வையையும்
நானில வளனு மேனனி பொலியு
மண்டாழ் கிடங்கின் விண்ணோங்கு புரிசை
நிரைநிலை மாடக் குறைதவி ராவணம்
சாறுநனி கழியா தாறுபடக் கிடந்த
காதம் பலசால் வாத மறுகின்
விண்டேத் தவரு நண்ணிய நசையுந்
தேறார் புலம்பல நூறுபடுத்தி
மாறார் புலம்பல வீறு படுத்தி
யிருபெரு வேந்தரும் வேளிரு மவிய
பொருபடை யலையிற் பொலிந்திட வெடுத்த
ஞெமன்கோ லன்ன சமன்றால் நிறீஇ
தாஅ ளாண்மையின் மாளாப் பொருள்பல
வேட்டவேட் டாங்கு தான்பல கொடுத்து
விறறாங் கிருந்த மீனம் மிசைஇ
வரைபோன் மார்வத் திறலோங்கு புயத்
தின்னளி யிசைஇய தொன்முறை நிம்பத்
தார்நனி துயலப் பேர்திசை நிறுத்திய
நாமக் கழலின் வாம பாதத்
தறன்றவ நிறீஇ மறன்றபத் தொலையா
வரசுமுறை யோச்சிய வழுதிய ராலவாய்ச்
சொல்லோங்கு மன்றத் தெல்லோங்கு புகழின்
வரமாய் பலகையின் விரகுடன் பொலிய
வேறுபுல மக்க ளரைசரா யுறினு
மாற்றலுந் தோற்றமு மசையா தாகி
யூழி பலவாய்க் காழுடனின்று
ஆய்ந்தோர்க் கினிமை யார்வத் தீந்து
நூல்வழக்கினு நுவல்வழக்கினு

மோந்துபல நிரம்பி சீர்த்திபல நிறீஇ
யரசு வைகிய வருந்தமிழ் மாதின்
வடக்க ணணியா மிடற்படப் பொறித்த
வகன்ற வேங்கடம் புகன்றரு ளமல
வேதம் பழகிய மாதவன் முதலோர்
காணு வறைகழல் பேணுதல்
தூயோர் நகையா வேயே யெனவே ௪

## வெண்பா.

ஏழின் முரலளியீ ரேர்வேங் கடப்பொருப்பிற்
றூழி யளைந்தாற்குச் சாற்றுவீ—ரூழியென
ஓதப் புனல்குளிர வொண்குயில்கள் வாய்சோர
ஏதப் புனல்வந்த தென்று. ௫

## கட்டளைக் கலித்துறை.

எண்டங்கு வேங்கடத் தெம்மிறை யோனம்மை யேதிலரின்
றண்டங்க ளில்லா மனந்தந் தனனினித் தாழ்த்தலின்றிப்
பண்டங்கு பெண்ணைப் பருமட லேறிப் பலரறிய
புண்டங்க வூர்ந்திட னம்பணி மற்றென் புகல்வதுவே. ௬

## ஆசிரியப்பா.

புலம்பல போந்து நலஞ்செல வியன்ற
புரைகூர் மனனே புரைகூர் மனனே
பழுமர முள்ளிய பறவை மான
வசையா னியன்ற நசையா னுணீஇய
நட்ட கேளீர் விட்டனர் வெறுக்க
வாரம் பட்ட தாரங் கறுப்ப
பைந்நுதன் மோந்து பலன்படப் பசைஇய
பைங்கூ ழென்னப் பணித்தே யோம்பிய
குழவி சினந்து நெட்டிடை யாக
கோழை வார காழை யூன்றி
திரைகதிர் மாய்க்கு நரைமுதி ரிளமை
குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு மிடையிடை

வைத்த நடியும் வழும்பு மாகிய
புன்னுனி நீர்மையு மின்னலின் பொய்ம்மையு
முன்னும் யாக்கை யோய்வில் பலவே
கொலைக்கொடுங் கூற்றம் மலைதல் புரிய
வொரீஇ யுய்ந்தார் தரைமிசை யுளரே
யிற்றென வுணரு மெல்லை யுளகொலோ
நின்றன னிருந்தனன் கிடந்தன னென்ன
கூத்தன் புறஞ்செல நாற்றங் கிடந்த
நிணந்தலை யாக்கைப் பிணந்தலை யாகும்
தண்ணந் தழீஇம்படக் கேட்டிலை கொல்லோ
வியன்ற யாக்கை யியனெறி கடந்தாய்
தோட்கோப் புணர்ந்திலை ஞாட்புறு நெறிக்கே
பகடெழீஇப் பொலிந்து சகடஞ் செலுத்திய
திறைகொ ளரசுந் தரைநின் றழுங்கிக்
கவலைப் பரவைப் பவந்தலை மாய்க்க
பிசையாக் கொண்டி நசையாற் கொளவுங்
குண்டு கிடந்துழி மண்டற லாக்கு
மாற்றுறு வினையைப் போற்றுஞ் செல்வம்
இலந்தொடை கருவியின் புலந்தனை யளித்தா
யுடலை மறியா நடலை பறித்த
மன்றுயி லொருவிய வொன்றுணர் கோளர்
நன்று புணர்ந்திலை பொன்றுறு மனனே
வாய்மைப் பகையை நோய்தரக் கிளந்தாய்
முக்கா லத்தினு மொத்திய லாகிய
வித்தியல் பொருளைச் சித்தம் போக்கினாய்
முலைவிலை சாற்றி கலைநெகிழ் மாதர்
நஞ்சுபொதி நோக்கிற் கெஞ்சா துழன்று
யம்ம வம்மவென் றரற்றொலி கேட்டும்
பரியா தகன்ற பவந்தொலை தவர்க்கும்
நையுறு நிரயம் பொய்யா தவிரவு
முடறறி வினையை வெறிபடப் புகன்று
கடிசுவை யென்றுக் களித்தனை கொண்டாய்
கழிபொரு ளிலமாய் வழிவழி யாகக்

## திருவேங்கட

கைவினை குயிற்றி நைவரு மனனே
வாழிய பெரிதும் வசைல கோடி
பணர்தலை நிலைஇய நனர்தலை வையத்
தான்றோர் பழிச்சும் வான்றிரை தெய்வக்
கங்கையங் காலன் மங்குல் நிறத்தன்
மழைமுதிர் வேங்கடம் மனமுறக் கொள்ளைமேய
வழிபாப் பதநினக் கொழியா நிலையே (எ)

### வெண்பா.

நிலையாச் சலமேய நீலநிறத் தண்ணால்
கலையாரும் வேங்கடத்தைக் காத—லலையாமல்
நோக்குந் திருவனையாய் நோக்கா னனவரத
மேய்க்கும் பணியவர்க்கு மிக்கு. [அ

### கட்டளைக் கலித்துறை.

மிஞ்சுங் கிளவிக் குயின்மொழி வஞ்சியென் மென்மைகண்டு
கஞ்சத் தவிசவ னெஞ்சாற் றுதிக்குங் கரும்பொழில்சூழ்
மஞ்சந் தவழ்திரு வேங்கட மாமலை வள்ளலின்னே
யஞ்ச லெனத்தனி யாழிசங் கேந்தி யணைகுவனே (கூ)

### ஆசிரியப்பா.

அகன்ற வான மிகந்த சிமயம்
கலித்த வருவி விழுத்தகப் பல்கு
மெக்குலக் கிரிகளு மிணையென வொண்ணு
மூன்று கூடத் தான்றவர் பழிச்சு
மொருபெரும் பதலைத் தருமியிர்ந் தவிரும்
வேனில் புகினுங் கானல் புகாத
மழைமுகில் படருந் தழைநிமிர் சோலை
கண்ணகன் பரப்பின் விண்கவித் தெழுந்த
முட்பொதி பசுந்தாண் முளரியந் தடத்து
வரந்தரு வெற்பி னரந்தையிற் சிவணிய
நிழல்சுளி மதமா நீராட் டயர
வெஞ்சின விடங்கர் நஞ்சினுங் கொதியாத்

துஞ்சிடப் பற்றி யஞ்சா திர்க்க
யாண்டுபல செல்ல வமர்புரிந் தயர்ந்து
ஏழ்மொழின் மூவினை யோய்விலா தமர்ந்த
பூதகாரண மாதவப் பொருளே
மடலை யொருவிய படல மேவாத்தி
னிருஞ்சிகை யமர்ந்த பெருந்தனி நாயக
வாதுந் தணந்த வாதிமூலவோ
வெஞ்சினன் கஞ்சக் கண்ணருள் புரிவாய்

எனவாங்கு

கொண்மூ வரப்பின் விண்முத லதிரப்
புழைக்கை யெடுத்து மழைக்கண் வார
விளிபகர் காலை யளிமலி மனத்தின்
பன்னக மொருவிப் பாவையை யொருவிப்
பொன்னந் திகிரி நன்கரந் திரீஇ
சென்றக மிசையோர் மைந்தக மெழுந்தென
காவிற் கடுகிய மாவிருஞ் சிறகர்ச்
செந்தலைக் கலுழ னுந்தினை யளித்தாய்

அதனால்

ஆதி பகவனீ யாத றெளிந்தேன்
உடல்பொரு ளாவி யுனவே யெனுமுயர்
போதங் கொண்டனன் பாதந் தருதி
வித்தகப் பொதும்பர் வேங்கடப் பொருளே. [க0]

## வெண்பா,

பொருளாரும் வேங்கடத்திற் புண்ணியன்மற் றென்னை
மருளாட்டித் தான்சென்றான் மன்ற—தெருளாளர்
போற்றும் புயல்காணும் போனல் லெழில்புனைந்த
ஊற்ற லுரைமி னவற்கு. [கக]

## கட்டளைக்கலித்துறை.

அஞ்சுந் திறலன் றசமுகன்மாய்கை யழிந்துகவே
மிஞ்சும் பகழியைக் கோத்தவ னெங்கோன் மிலைந்ததுழாய்
விஞ்சும் பொழிற்றிரு வேங்கட னிற்க விதம்பலவா
யஞ்சும் பகழியுந் தென்செயுங் காமனிற் காற்றுவனே. (கஉ)

## ஆசிரியப்பா.

ஆலமு மமுது மாலுடன் பெயரு
முருக்கமை வுற்ற வொண்குழை சினந்த
வுரங்குடி யமைந்து வரந்தனி மாண்ட
வயராற் பசைஇய சயலார் கடைக்கண்
புலம்புமுத் துறைப்ப நலந்துறந் தினையா
பொய்ம்மாண் மருங்கு லைம்மார் பணைத்த
சலம்புணர்ந் தோங்கிய வலம்புணர் வெற்பின்
கலந்தணந் தோங்கிய கண்ணமை கொம்மை
வருமுலை நோக்கி வண்டொடி நெகிழ்த்தாத்
தோடவிர் விரல்கள் மாடகந் துறந்துஞ்
சூடகப் பூங்குழல் பாடல் துறந்தும்
விண்பூ மீனின் பண்பூச் சொறிந்த
வொண்பூம் பாய லெண்டீ யென்றுங்
கருவிளைக் கம்மிய னுருநிமிர் களத்திற்
றோல்கா லன்ன மால்கா லெறிந்து
மரவுரி யியன்ற கரைஇய கலிங்கம்
பசைதீர் மேனி யசைநவின் றுருவியும்
நைவா ரரவின் பைவாய் மதியின்
மாசுறு வாணுதற் றேசினை யிழந்தும்
நோக்கின நோக்கின வாக்கிய வான்பொருள்
நின்னி னுன்று மன்னக் கிளக்குந்
தானீ யாயதேனார் பனிமொழி
நின்னீர் மையளே நின்னீர் மையளே
கைம்மா பிடியொடு களிக்குஞ் சாரல்
விண்டோய் வேங்கடப் பண்டாழ் துளவச்
சூர்முலை நயந்த கார்மலி மேனி
யுலத்தினுங் கடிய வலந்தரு வுளத்தின்
மாயோய் நின்றன் மாணெளி நன்றே. (௧௩)

## வெண்பா.

ஈந்து பலவளனு நல்குதிரு வேங்கடத்திற்
பாந்த வினையகற்றும் பாரளந்தோய்—மைந்துடைய
செங்கண்மா லென்கண்மா றீர்த்திடுவா னின்செவ்வி
யங்கண்பா ரம்புவியின் கண். (கச)

## கட்டளைக் கலித்துறை.

கண்ணொன்று தாமரைக் காரொன்று மேனிக் கயல்புரளுந்
தண்ணொன்று செஞ்சுனைத் தாரொன்று வேங்கடத் தாணையொன்று
விண்ணொன்று மாதவம் வேண்டகி லேனினி வேறென்செய
பண்ணொன்று தாதுடைப் பாதாம் புயநம் பராங்கதியே கரு

## ஆசிரியப்பா.

கதியா ரேனம் நுதியாற் கவருங்
கச்சங் கண்ணிய கழலூர் பதமொடு
திருகிய சினத்துத் திறலுறு புளிஞர்
நளியுறு கனியை யளியுட னெடுக்கு
மாகத் தண்டலை வேங்கட நாயக
கருவூர் வினையை மருவா தளிக்கு
மரிமலர்க் கழலா னெறிஇரு ளுந்தியுஞ்
சூறையின் வரூஉங் கார்புரை யவுணன்
உடறவ ழுயிரை யடருறப் பறித்தும்
முத்தேர் முறுவ னத்தேர் களத்துத்
தாய்கோல் கொள்ள வாய்திறந் தன்று
விண்ணொடு மண்ணு நண்ணிய தெரித்தும்
புறவந் தங்குறுங் கறவை புரப்பான்
மழைபத் திரமாய்க் கழைக்கல் லெடுத்தும்
பத்தினிக் கடவுள் சித்தநொந் தயர
நாணு னவைக்கண் பேணு வளித்தும்
அழுக்கா றிருந்த முழுக்கார் மனத்து
நஞ்சப் பாந்தள் விஞ்ச விசித்தோன்
வரந்தலை பேலா வறந்தனி சிறக்க

வல்லல் கிடந்த கல்லதர் போகிய
வான்செல் புரையு நோன்சால் தடக்கை
நல்லேர் மணந்த வில்லே ருழவ
னதிமலி வேணி மதியுடன் மிலைந்த
தொழுவார் பூக்கு மழுவா ணெடியோ
னுருக்கிய பூச லுயர்வுறப் புரிந்த
வசிகூர் நோக்கிற் சசிகூர் மைந்தன்
மாகங் கடவி வாகை புனைந்த
தவாத நிலையர் நிவாத கவசர்
ஓகை படுத்து நாகம் நிறுவிய
வெழுநா வுண்பான் பழுதீர் துடவை
யளிநனி யேற்று துளிமலி காத்த
மாண்டவம் புகன்ற காண்டீ வற்கு
பரவையி னிமிர்ந்த வுரைபுக வொண்ணா
விழுப்புண் டாக்கிய கொழுப்புண் வேற்கை
தரைபுண ரரசர் கறைதீர் வெள்ள
நிணந்தின் பேய்மக ணெங்கையஞ் சீர்தழீஇ
யஞ்சுவரு யூப மெஞ்சா தாட
வோடாக் களத்தி னோடா தவிப்பான்
கதியாதி போகிய விதிமாண் புற்ற
கொடிபடு சுவல விடுமயிர்த் துரக
முளவுகோ லளந்து பளகிலா தமர்ந்து
பாரதப் போரின் மாரதங் கடவிய
நின்றனை யன்பர்க் கன்பனென் றுணர்ந்தே
னுடையார் முறுக்கி யுடையார்ப் புரக்குந்
துளிமுகின் மேனி யளியோ யெனவே. (கசு)

## வெண்பா.

எனக்குற்ற வெம்பழிக் கென்றது வெம்புண்
டனக்குற்ற கோலிற் றளர்வே—னுனக்குற்ற
வெல்லா மெனக்கென்றே யோர்வேங் கடத்திருந்தான்
வல்லார் தொழுந்தகையன் மாண்பு. [கஎ]

## கட்டளைக்கலித்துறை

வல்லுற்ற மாமுலைக் கொம்பரன் னாப்சின வாகைபுனை
செல்லுற்ற மாமுகிற் செந்தனிப் புண்மிசைச் சேருறமேவு
கல்லுற்ற வேங்கடத் துற்றவெ லாந்துணைக் கைக்கொளிநின்
நல்லுற்ற பூங்குழற் றூடுவ னிங்ங னணிமையனே [௬௪]

## ஆசிரியப்பா.

அவிரொளி யிமைக்குங் கவிரிணர்க் கூந்த
லிமையா நோக்கத் தமையா வனப்பி
னாக மடைந்தைய ராகத் தியல
நுண்ணூருக் கவரும் விண்ணூறு கம்பிய
னடங்கும் வானத் துடங்கொள் கல்வி
னாடக மளப்பா னாடகம் பொறித்த
சேடகந் தந்த நாடகக் கோட்டி
னாவா யியங்கு மோவாத் திரைவளங்
கருவி மாமுகில் மருவிய நிமிர்ந்து
பின்னிய தென்னத் துன்னிய கதுப்பி
னணங்கிறை யிருந்த நுணங்கெழி லாகப்
பைவாழ் துத்திப் பணப்புரை யல்குல்
மையல் தவழுந் தொய்யில் வளமுலை
யாவிப் புரைகூர் காவிப் புரைகண்
கட்டொளி வாய்ந்த வட்ட வானுதன்
முல்லை சான்ற முல்லையம் புறவி
னுமுலை கவருங் கோவியர் மணந்த
வெல்லு மிரவும் புல்லிய தறியா
மரன்பயி லடுக்கத் திவர்சுழை மணியுஞ்
சினவிய சிந்துரத் தினமணி விளக்கும்
வேங்கட னுடன் விரும்பிடு கண்மை
திளையிடு மணவி னுரைதெரி கல்லா
வெண்ணி னிருந்தன சொண்மட வேபே

## வெண்பா.

மடங்கவர்ந்து புள்ளூர்ந்த மாமாய னெஞ்சத்
திடம்புகுந்தான் யான்காண்ப தென்ன—வுடம்பவிரு
நெஞ்சிற் கினிதுற்ற நீர்மையளே வேங்கடத்தாற்
கெஞ்சு மெனப்புகல்வா னேகு. (உ0)

## கட்டளைக்கலித்துறை.

ஏவிய லும்பணிப் பூவிய லும்பழித் தேருகின்ற
மாவிய லுந்தொலை கண்ணினும் வார்முலை மார்பினுமே
பாவிய லும்புனற் சோலையி லும்பரிந் தாலிதருந்
தூவிய லுந்திரு வேங்கட நீதரு தூமலரே. (உக)

## ஆசிரியப்பா.

மலிந்திடு குடக்கண் பொலிந்திடு மமுதக்
கிரணப் பிறையெனுங் கேழுறு கோடு
மலைக்குஞ் சரந்தவிர் மலைக்குஞ் சரத்தின்
கூனுடை மருப்புந் தேனிறால் பிலிற்ற
கொழுவா யாகி யுழுவாய் வரூஉ
மளியின முரலத் துளிநறப் பெருக்கும்
வடமார் கோவைத் தடமார் பளித்த
கைவல் புரையுந் தையல் சினவிய
கைவன் மகளிர் நைவரக் குற்றிய
வளையார் சுண்ணம் வடிதரத் திமிர்ந்து
சுணங்கணி வனமுலை சுரிகுழல் கூதித்து
வாடாத் தோடவிர் கோடார் மஞ்சரி
மையர மகளிர் நைதர வாடுஞ்
செம்மையர் போற்றுஞ் சேணுறு நாற்றமும்
வானத் தெய்வப் பேன நதிக்கண்
மொய்யெ னக்கலந் தொய்யெனப் பரந்து
தாளாண் மிகுத்த வேளாண் மையரின்
தோளிவர் புற்ற வேளிரின் பலவா
பார மணியுடன் கார மணியு
மரிமா முழைஞ்சிற் கரிமாத் தந்தமும்

பாறை மருங்கிற் சாறையாய்ப் படுத்து
தேக்ககி லாரம் போக்கிய னாகந்
தாரைக் குரல்வாய் வேர லவண
மீடறக் கெடுத்துப் பாடறக் குதிக்கும்
புடைதரு சுனைநீர் தடையறப் பெயரும்
பண்டையோர் குழீஇய தொண்டகஞ் சிறந்த
கடைநிலந் தீர்ப்போய் வடவேங் கடத்தோய்
திருவுடைக் கடவுட் பெரும்பத மடையவும்
பேதபூ தத்தின் மாதகு வலியு
மோதிய வரத்திற் றீதுறப் பொறுத்து
மாக வலியுண வாகையான் மடுத்துப்
புறத்துறு மண்டமு மறத்துடன் செலுத்தாத்
தலைமுதற் கடவுட் டானலா தின்றென
தொன்முறை யாகத் தன்பெயர் கிளத்திய
போழு மெயிற்றுப் பேழ்வா யரக்கன்
கனகப் பெயரவன் மனங்கொதித் தறைந்த
தூணம் பிளந்தே நாண மலிந்திட
நுதியுகிர் வாய்ந்த கதிர வரியாய்
மாவுரங் கீண்டே யாமுறை பழிச்சிய
வோத்துத்திற னறிந்த தோத்திர வடியவற்
குலவா வன்புட னலவாழ் வளித்த
வெட்டுறு வெண்ணையி னுட்டெளி வாகிய
புங்கப் பொருளா யெங்கு நிறைந்தோய்
நின்னுறு பெருமை யுன்னலு மரிதே. (௨௨)

## வெண்பா.

அங்கடமா வேங்கடத்துச் சங்கடமா சக்கரத்துப்
பொங்கடலி போதந்த புங்கவனே—சங்கடமா
ரேதுந் தனையொருவும் பாதந் தனையளிப்பாய்
போதந் தனை யுறவின் புற்று. (௨௩

### கட்டளைக்கலித்துறை.

உகந்தொறுந் தானுப்ச்சகந்தனிக் காத்தவ னுண்மைக்கென்று
மிகந்தொரு போது மகன்றவ னில்லையெம் வேங்கடமாள்
நகந்தொறுக் குற்ற நடுக்கப் புரைகண்ட நாயகன்பே
ருகந்தொரு போதள வுன்னிட வென்னவா மூழ்வினையே

### ஆசிரியப்பா.

விண்மழை மருளு மொண்புழைக் கரத்து
முறஞ்செவி யலையுந் திறன்செறி வாரணம்
பிடியொடு முயங்கிக் கறையடி பெயர்த்து
துளியெழக் குடைந்து களியுட னாடும்
விரிமலர்ப் பள்ளியி னரிதுயி லமருங்
கறங்குவெள் ளருவி பிறங்கிருஞ் சோலை
கூற்றமும் போற்று மேற்றிய வேற்றக்
கணையப் புட்டில் பணைசுவ லசைத்து
கோலுறு பாணியிற் காலிற் றிரிதரு
மஞ்சாக் திறலுடைத் துஞ்சாக் குறவ
ரருமா னோக்கிற் பெருமா மடமக
ளல்லியி னுடங்கி முல்லையி னரும்பி
யேன விதணம் பானலங் கெடவே
கிளிகடி தோப்பிக் களிமகிழ் மடுக்கும்
போதங்கண் ணரிய நாத வேங்கட
பேதிலை மாவலி கோனிலை கெடுப்பான்
முந்நீர்ப் புடவியின் மன்னிய மூவடி
யெண்குற ளாகி மண்டா வெனவே
வோர்வில வுருவாய் நிர்செல நிமிர்ந்து
மூவுல களந்தாய் சேவடி யாலே
காந்திடு விரதப் பார்ப்பன மேனியா
யறஞ்செறி நெஞ்சத் திறைஞ்சலர்க் கேறு
றாசை யனைத்தினுந் தேசை நிறீஇய
வானக்கதிரவன் பானச் சேய்பா
லறப்பய னனைத்து மளிப்பா யெனவே
யம்பின் வாயுறு மப்பா லேற்றவற்
குலப்பிலா நலனை யளப்பில வீந்தா

பாசிலா மெறிந்த பரசுரா மன்றான்
சினந்தணன் றந்த செயிரறு தநுவைச்
செங்கர மேற்றுப் பொங்குற வளையா
விருக்கெலா மறிந்த தருக்குடை முனிவன்
முயன்றன வெல்லா மயர்ந்தனன் கொடுக்க
வொருசரந் தொட்ட பருவலித் தடக்கைப்
பிறவாழி நீக்கு மறவாழி யந்தண
சிறுமையிற் பெருமை காட்டு நின்றன்
கொன்னுறு வாடலும் பன்னவும் படுமே. (௨௫)

## வெண்பா.

பஞ்சுற்ற மெல்லடியோ டஞ்சுற்ற கான்புக்க
விஞ்சு முகின்மேனி வேங்கடவா—நஞ்சுற்ற
பற்றலர்க்கும் நற்றவர்க்கும் பாங்களித்த நின்னெஞ்சத்
தூற்ற மறைப்பொருளென் னேது. (௨௬)

## கட்டளைக் கலித்துறை.

ஓம்புற்ற கல்வியு ஞானமும் போற்றிய வுத்தமர்தந்
தேம்பெற்ற பொன்னடிப் போதிற் பயன்சில தேறலுற்றேன்.
காம்புற்ற போதலர் வேங்கட நின்னருட் கண்ணும்பெற்றே
னான்பெற்ற வாழ்வினுக் கேதுங் குறைவில்லை நானிலத்தே

## ஆசிரியப்பா.

நாணு நலனு நந்தா நிறையும்
பேணுந் திறனும் பெட்புங் கவினி
சிதையா வுள்ளஞ் சிறந்திடு பான்மையின்
வழுக்கைத் தபுத்தே யொழுக்கின் வாய்த்து
யானச் சூன்மழை வாய்மொழி தருஉம்
யாணர் நோக்கி மாணப் புரியுங்
கானத் தோகைக் கவின்பெறு சாயல்
வாரிவான் புரையும் வேரியார் கோதை
கொம்மை வருமுலை குவடுறு பொறையா
றுடுறு நுசுப்பிற் படுறு செலவி

ஞய்தொடி முன்கை யஞ்சொலா ரொடு
ஈட்டிய கெடுக்குங் கோட்டப் பொய்ம்மை
யமுதவான் பெறினு மலமரல் கருதாச்
சேணி னீக்கிச் செம்மையே புகலும்
வாணு ளடைக்கும் வாய்நட் பார்ந்த
பூசல் நின்ற தேசார் முழவின்
காண வரிதாய் மாண நிமிர்ந்த
வலந்தரு தோளின் வண்மை யாளர்
பொறைகூர் மரபிற் போக்கிய சிந்தனை
வெள்ளைக் கோட்டி விரும்பாக் கோளர்
நில்லா வுலகத்து நிலைபே றுன்னு
வரியவு முரியவும் பரிசற வீசி
விழுப்பயன் கொள்ளும் பழிப்பிலார் வாழும்
நரகஞ் சிறந்த வாகார் கவட்டுப்
போனக மாண்ட வானவர் தருவே
முன்னிய விளைப்பின் முறைதெரிந் தளித்து
மென்ன விளிக்கு மெழிலார் கரத்தின்
தோடா ரொலியற் காடார் கொடிநிமிர்
பொன்னினு மணியினும் புனைந்திய லொளிரும்
போக்கறு மாடக் கோக்கொளு மறுகும்
பொறிவழி போக்கா நிறைமொழி யேந்திய
கள்ளப் பொறிவழி யுள்ளக் காட்சியர்
புரிமுன் றுடுத்த பொன்போன் மேனி
மாசடை யில்லாத் தேசுடை மரபி
னெத்திறத் தார்க்கு மெழினெறி யளிக்கு
முத்தீச் செல்வத்து முதுமறை தேருங்
கோவிடு பாணிப் பாலிகை கலிங்கத்
தந்தணர்ப் பள்ளியு மாத்துறு சாலையுந்
தூரியும் பேரியு மார்கலி யவிக்க
வேட்டங் கண்ணிய பாட்டிமிர் சாலையுந்
தொழுநெறி சான்ற விழுமிய கொள்கை
நிலனும் வானு நீள்புகழ் நிறுத்துங்
காலமு மிடனும் வாலிதி னுணர்ந்த

வமிழ்தினு மினிய தமிழ்தெரி புலவோர்
மோட்டியல் சிமயக் கோட்டி மண்டபமு
மலையிற் கலந்தரு புலையறு கூலமும்
பல்வேறு புலத்து மல்லல் வளத்து
மிளிருறு பண்டமு மேவிப் பொலிதரு
மாவிய லறிந்த வோவியர் வியக்கு
மம்மென் சும்மை யாவண வீதியும்
பசிப்பிணி நலியப் பையென வுறுவார்
நசைப்பட வுண்பா னன்றமை வுற்ற
பாரிடங் கொண்ட சோறிடு சாலையு
மோயாப் போகச் சாயா யாக்கை
கற்பகங் கமழும் பொற்புடை நாகரு
மாற்றல் சான்ற மாற்றரு மொழியி
னலம்பும் புலம்புடை யைந்தெண் ணுற்ற
புலம்புரி கோளரும் வலம்புரிந் தவராய்த்
தலையால் வணங்கிக் கலையாற் றுதிக்குந்
தொகுப்புடை யியங்கள் வகுப்புறக் கறங்கும்
நோக்குந் தகையார் வாக்கிற் கமையா
மாணுச் சிறந்த யாணர் விழவரு
நீனிற விசும்பி னூனமில் லளவை
யெனைத்தென வறிவா னெழுந்தது கடுப்ப
கனைத்தெழுந் தார்த்துப் பனிப்பெய லளிக்கும்
பசும்புல் காட்டு மசும்புடை யெழிலி
யிறையிருந் தாற்றுந் திறலுடை மதிலார்
நால்வழக் கிருந்த பானெறி யோர்ந்தோ
ருயிர்ப்பினை யெறிந்து பயிர்ப்புட னோக்க
தெய்வஞ் சான்ற திறல்விளங்கு கம்மியன்
மின்னினும் வெயிலினுந் துன்னிய தென்னக்
கைதொழூஉப் பழிச்சும் மொய்தரு நிலவின்
மதியுங் கோளு மணிவிளக் காக
வுலக மனைத்து மொருவழி போக்கும்
நெய்யார் கதவந் தைவரு வாயில்
பொன்றேத் தவிரின் மன்னுறுத் தீட்டிய

புண்ணியச் சினகரம் பொருந்திய வேங்கட
பற்றினை ரியாரு முற்ற வியக்கும்
பாவலருந் தமிழின் மேவிய துறையி
லவையெலாங் கமழச் சுவையெலா மமைத்து
பொனுறு வுலகின் மன்றத் தவிரு
நின்ற னடியார் மன்ற வருளிய
வோதல் சான்ற மேதகு மாலை
யுறுகா தலுட னறுகான் மூனு
முறுகார் பதத்தின் மருவா திற்கவு
மூன்மலி யாக்கை யுற்றிடு பயன்றரு
மொழித்திற னறியாது பழித்திறன் கண்டேன்
பளகெலாம் பொதிந்த பாவின் மாலை
யோர்க்கு நின்செவி யோர்க்கா தாயினு
மரப்பெயர் சொல்லா மாணுருக்கொண்டு
நின்பதப் பெற்ற வன்பரு முளரே
யாதலின்.
உளமலி காதலி னுருற்றிய வெற்கும்
பாவின் பௌவத் தாலிற் கிடந்த
பாப்பணை மீது காப்புக்கைம் மிகவே
பச்சையும் பவளமும் முச்சிதங் கொள்ள
வஞ்ச லளிக்கும் பஞ்சா யுதங்களுங்
கல்விற் றேரையுங் கருப்பையிற் குழவியு
மியானையு மூட்டி மேவுறக் காக்கு
மூகை மனைத்து முயர்வா லீன்ற
பனிமொழி யன்னையும் பாங்கி லமர
வுயர்வெலா முற்ற வுயர்நல முடையனு
மயர்வறு மமர்த மதிபதி யாகித்
துயரற மதிநலந் துலங்குற வளித்து
போற்றுவார் போற்றும் பொருளாய் நின்ற
தானே யான தனிமுதற் பொருளே
போற்றி நின்றனன் பொலம்பதந் தருதி
வான்றரு புகழின் வண்மை யோயே

### வெண்பா,

வண்டிரைக்கத் தேன்சொரியும் வாழிவட வேங்கடத்தி
லண்டர் பணிகின்ற வாழியான்—புண்டரிகப்
போதன்ன தாட்டுணையைப் போற்றாத நாவென்னுஞ்
சாதென்ன வாங்கேட்காக் கால். ௨௯

### கட்டளைக்கலித்துறை

காலைக் கதிரவன் வேலைப் புறத்தெழு காமரன்ன
சோலைப் புறத்தெயில் சூழ்திரு வேங்கடச் சுந்தரற்கென்
மாலைப் புறத்திட மாலை புனைந்தனன் மன்புவியிற்
சேலைப் புறத்திடு கண்ணிய ளுந்தருஞ் செந்திருவே. (௩௦)

திருவேங்கட மும்மணிக்கோவை
முற்றிற்று,

---

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

# திருவேங்கட மும்மணிக் கோவை.

**1934.**

கவிராஜ பண்டிதர்
ஆந்திர காசியப திம்மப்ப அந்தணன்

உ

# திருவேங்கட மும்மணிக் கோவை

இஃது

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும், சேலம் நகரபரிபாலனக்
கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியருமாகிய
கவிராஜ பண்டிதர்,

**ஆந்திரக்காசியப திம்மப்ப அந்தணர் அவர்களால்**
இயற்றப்பட்டது.

---

சேலம் குகைவாசியும், தேவாங்ககுல திலகரும்,
இந்நூலாசிரியரது இயற்றமிழ் மாணவருமாகிய,

**திருவாளர். T. அண்ணாமலைச் செட்டியாரவர்களது**
அரிய பொருளுதவியால்

சேலம் ஸ்ரீ இலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

**1934.**

*Copy right Registered*] [விலை **4** அணா.

# உரிமையுரை.

## எழுசீராசிரிய விருத்தம்.

[நூலியற்றக் காரணம்.]

கற்ற தன்பயன் கடவுளைத் தொழு
லோட வன்புகழ் கருதியே
யுற்ற நூல்களை யோத லும்புதி
தாவு ரைத்தலு மோர்ந்திடின்
நற்ற வர்செய லாகு மாதலி
னுதன் வேங்கட வற்கொரு
குற்ற மற்றநன் மும்ம ணிக்கோவை
சிறியன் கூறுவ னுபினேன்.

## கலி விருத்தம்.

[உரிமையுரை.]

இந்தமால் கோவைதா னென்னை யீன்றரு
ளெந்தையா மிராமசா மிப்பெ யர்கொளுங்
கந்தனை நிகர்த்தவன் கழற்கு மன்னையா
முந்துவேங் கடவிலக் குமிக்கு முரிமையே.

# முகவுரை.

---

திருவேங்கட மும்மணிக்கோவை யென்னுந்தொடர், அழகிய வேங்கடத்தைப்பற்றிய மும்மணிக்கோவை யென்னும் நூல் என விரியும். (திரு + வேங்கடம்) பண்புத்தொகை. (வேங்கடம் + மும்மணிக்கோவை) இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் றொக்க தொகை.

'திரு' - என்னும் பலபொருளொரு சொல் - வடமொழியிலே ஸ்ரீ என்பதுபோல, தமிழிலே, தேவர்கள், தொண்டர்கள், ஞானநூல்கள், மந்திரங்கள், புண்ணிய ஸ்தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் முதலிய மேன்மையையுடைய பல பொருள்கட்கும் விசேஷண பதமாகி, அவற்றிற்கு முன்னே மகிமைப் பொருளைக் காட்டி நிற்கும். ஸ்ரீமகாவிஷ்ணு, ஸ்ரீ பக்திசாரர், ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீ அஷ்டாக்ஷரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீகைரவிணி, ஸ்ரீபாதம் எனவும், திருமால், திருமழிசைப்பிரான், திருவாய்மொழி, திருவெட்டெழுத்து, திருவரங்கம், திருவல்லிக்கேணி, திருவடி எனவும் வழங்கு மாற்றாலறிக. இது வேங்கடத்துக்கு அடைமொழி; மும்மணிக்கோவைக்கு அடைமொழியாகவுமாம்.

வேங்கடமென்பது - திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டினுள் முதலதும், 'கோயில், திருமலை பெருமாள் கோயில்' என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகிற மூன்று ஸ்தலங்களுள், இடையதுமாகியதலம். தன்னையடைந்தவர்களுடைய பாவவினைத்தையும் ஒழிப்பதனால் 'வேங்கடம்' எனப் பெயர்பெற்றது; வடசொல். வேம் - பாவம். கடம் - எரித்தல் எனப் பொருள் காண்க. (இதனை, 'அத்திருமலைக்குச் சீரார் வேங்கடாசலமெனும் பேர் வைத்தன ரதுவே தென்னில் வேமென வழங்கெழுத்தே, கொத்துறுபவத்தைக் கூறும் கடவெனக்கூறிரண்டாஞ், சுத்தவக்கரங் கொளுத்தப்படுமெனச் சொல்வர் மேலோர்," "வெங்கொடும் பவங்களெல்லாம் வெந்திடச் செய்வதால் நல், மங்கலம் பொருந்துஞ் சீர் வேங்கடமலையானதென்று" என்னும் புராணச் செய்யுட்களாலுமறிக. அன்றி, வேம் என்பது - அழிவின்மை, கடம் என்பது ஐசுவரியம்; அழிவில்லாத ஐசுவரியங்களைத் (தன்னையடைந்தார்க்குத்) தருதலால் வேங்கடமெனப் பெயர் கொண்டது' என்று வராக புராணத்திற் சொல்லப்பட்டவாறுமுணர்க. இக்கருத்து, 'மருவிடுமடியவர் மாண்புறு நிதியம், உற்றிடலானும், உறுபவர் பவவினை யிரிதர லானு, மொருபேர் வேங்கடம், மிளிர்ந்தது' என, இந்நூற்கண் வந்திருத்தலைக் காண்க.

மும்மணிக்கோவையாவது-ஆசிரியப்பாவும், வெண்பாவும், நேரசையும் நிரையசையுங்கொண்டு எழுத்தெண்ணிப் பாடும் கலித்துறையும் (கட்டளைக் கலித்துறை) முறை முறை தொகை முப்பதுபெற அடுக்கி அந்தாதித் தொடையாற் பாடுவது.

இதனை, 'அகவல் வெண்பா வசையெண் கலித்துறை,
தொகைமுப் பதுபெறச் சொற்றொடர் நிலையிற்
கூறுதன் மும்மணிக் கோவை யாகும்'

என்னும் இலக்கண விளக்கச் சூத்திரத்தானறிக. வெவ்வேறுவகைப் பட்ட மூன்று மணிகளை மாற்றி மாற்றிக் கோத்த வடம்போல, வெவ்வேறு வகைப்பட்ட மூன்று வகைப்பாக்களை மாற்றி மாற்றி வைத்துத் தொடுத்து அமைக்கப்படுதலால், இவ்வகைப் பிரபந்தம் இப்பெயர்பெற்ற தென்க. ஆகவே உவமவாகுபெயரால் வந்த பெயராகும். இந்த மும்மணிக்கோவை காப்பு நீங்கலாக முப்பது செய்யுட்களை யுடையது.

மும்மணிக்கோவை யென்னும் பிரபந்தம் நம் தெய்வச் செந்தமிழ் மொழிக்கண் மிக அருகியே வழங்கி வருவதைப் புலவரியாவரும் நன்கறிவர். அதிலும் வைணவ சமயத்தில் இத்தகைய பிரபந்த மிருப்பதைக் காண்டல் மிக அரிது. இக்குறையை நீக்கும்பொருட்டும் தமிழ் கற்றதனாலாய பயனையுறுதற்பொருட்டும் 'திருவேங்கட மும்மணிக்கோவை' யெனப் பெயரிய விந்நூலை யியற்றுவேமாயினேம். 'தோத்திரப் பிரபந்தத் திரட்டு' என்னுந் தொகுதியை வெளியிட்ட பின்னர், எங்குல தெய்வமும், சரணாகத ரக்ஷகனுமாகிய திருவேங்கடத் தெம்பெருமான் எமக்குக் கனவிடைக் காட்சி தந்தருளிக் கடாக்ஷித்தனனாகலின் உடனாகப் பயபக்தியு மிறும்பூது மொருங்கே கொண்டு விரைந்திந்நூலைப் பாடி நிறைவேற்றினேம்.

கொங்கு நாட்டிலுள்ள ஈரோடென்னுந் தலத்திற் றருமப் பிரபுவாக விளங்கிக் கீர்த்திபெற்ற திருவேங்கட நாயகரவர்களது முதற் குமாரரும் தென்மொழியாற்றலோடு வடமொழிப் பயிற்சி பெரிதுமுடையாரும், வைணவ சமயத்தாராய்ச்சியுடன் அம்மத நூற்களில் மிக்க ஈடுபாடு பெற்றவரும் 'மகனறிவு தந்தையறிவு' என்றற்கேற்பத் தம் தந்தையைப்போன்ற தரும குணம் சான்றவரும் எமதுழுவலன்பருமாகிய ஸ்ரீமான் ஈ. வே. கிருஷ்ணசாமி நாயகரவர்களிதனை நோக்கி மிக வியந்து பாராட்டிவேண்டிய உதவி புரிந்தார்கள். அங்ஙனமே முன் எமது தோத்திரப் பிரபந்தத் திரட்டை யச்சிடற்குப் பொருளுதவி புரிந்த எமதியற்றமிழ் மாணவரும் பரோபகார சீலருமாகிய திரு. T. அண்ணாமலைச் செட்டியாரவர்களும் இந்நூல் வெளிவரற்கு வேண்டிய பொருளுதவி புரிந்தார்கள். எமதொருசாலை மாணவரும் ஆந்திர திலகருமாய ஸ்ரீமத் S.S. வேங்கடரமணையர் அவர்களும், எமது கல்விச் சாலையிற் கலை பயின்ற எம்

மாணவர் சிரஞ்சீவி நாகராஜ ஐயங்கார் அவர்களும் இந்நூல் விடயத்தில் தம்மாலியன்ற உதவியை யாற்றினர். இத்தகைய பரமோபகாரப் பக்திமான்களை யென்று மறவாதவர்கள் திறத்து மிக நன்றியறிதற்கடப்பாடுடையேம்.

தமிழ்த் தெய்வம்போல் விளங்கும் சென்னை மகா மகோபாத்யாய டாக்டா. உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எமது வேண்டுகோட்கிணங்கி யிந்நூலுக்குத் தக்கதோர் தகவுரை வழங்கியமை குறித்துப் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேம்.

உரையாசிரியச் சக்கரவர்த்தியும் எத்தகைய தமிழ் நூல்கட்கும் எல்லா விலக்கணங்களும் பொருந்த உரை யெழுதுவதில் மகா நிபுணத்வம் வாய்ந்தவரும் எமது நெடுநாளைய நண்பருமாகிய திருவல்லிக்கேணி பிரஹ்மஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரிய சுவாமிகளவர்கள், எமது வேண்டுகோட் கிணங்கி, முன்னர் விநாயகர் மும்மணிக்கோவைக்கு அபிப்பிராயமளித்ததுபோலவே இந்நூற்கும் தமது அபிப்பிராயத்தை அனுக்கிரகித்தருளினார்கள். இம்மகானுக்குச் செயக்கடவ கைம்மாறியாது?

எமது நண்பர் திலகமும், கணிதம், ஆங்கிலம், ஆரியம், சரித்திரமாதியவற்றிற் சிங்க நிகர்த்த பேராற்றன் மிக்கவரும் ஈரோடு மகாஜன உயர்தரக்கழகம், திருச்செங்கோடு போர்டு உயர்தரக் கழக முதலியவற்றிற் றலைமையாசிரியராயிருந்து தற்போது திருநணு வென்னும் பவானியிலிருந்து இளைப்பாறுபவருமாகிய பிரஹ்மஸ்ரீ ப. வே. இராமசாமி சாஸ்திரியாரவர்கள் இந்நூன் முழுதும் படித்துப் பார்த்துத் தக்கதோர் தகவுரையை யாங்கிலத்தில் வரைந் துதவிய நன்றியை யெக்காலு மறவேம்.

சேலம் நகர பரிபாலன உயர்தரக் கழகத்திலுதவி யாசிரியராகத் திகழ்பவரும் கமர்ஷியல் பாடப் பகுதிகளைப் புகட்டுவதில் பேராற்றல் மிக்கவரும் வைணவ சம்பிரதாய நூல்களில் சிறந்த பயிற்சியுடையவரும், குணநிலையமும் எமதாப்த நண்பருமாகிய பிரஹ்மஸ்ரீ லக்ஷ்மிநாராயண ஐயங்காரவர்கள் நூன்முற்றும் படித்துப் பார்த்துத் தமதரிய அபிப்பிராயத்தை யகமகிழ்ந்தளித்தமையைப் பெரிதும் பாராட்டுகின்றேம்.

வழக்கம்போல் எமது கல்லூரி மாணவரும், உயர்தரக் கழகச் சீடர்களும் இந்நூலை யாம் பகரக் கேட்டுவந்து எமது தோத்திரப் பிரபந்தத் திரட்டில் ஒவ்வோர் பிரதி பெற்று அத்தொகை யிதற்குதவும்படி புரிந்தார்கள். அவர்கள் நன்றி மிகப் போற்றற்பாலது.

எமதியற் றமிழ் மாணவரும் இந்நூலை யச்சிடற்கு வேண்டிய உதவி புரிந்தவருமாகிய ஸ்ரீமத் T. அண்ணாமலைச் செட்டியாரவர்களது பெரு

நன்றியை மிகப் பாராட்டி நாஸ்துதி பாடும் வழக்கற்ற யாம் அவரைத் தெய்வாம்சப் பண்புடையாரென மதித்து ஓர் நவமணிமாலையை யன்னார்க்குவந்தளித்துள்ளோம். இந்நூற்குப் பின்னாக அது சேர்க்கப்பட்டுளது.

எமது தமிழ் வித்வ நண்பர்களாகிய வெள்ளாளப்பட்டி திரு. S. கிருஷ்ணசாமி ஐயர், சென்னை வாகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார், ஜலகண்டபுரம் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை, சேலம் திரு. எம். எஸ். திருமலை ஐயங்கார், ஓமலூர் திரு. தே. வீரராகவ ஐயங்கார், புழலை திரு. திருநாவுக்கரசு முதலியார், ஈரோடு திரு. சுப்பராயலு நவுத்தகாரு, திண்டிவனம் திரு. பழனிசாமி சிவாச்சாரியர், செவ்வாய்ப்பேட்டை திரு. T. சுப்பராயச் செட்டியார் முதலியவர்கள் மிக்க அன்புடன் இந்நூற்கு யாம் விழைந்தவாறே தத்தம் அபிப்பிராயங்களைச் செய்யுள் மூலமாக எழுதியனுப்பினார்கள். அவர்கட்கு எழுமையுங் கடப்பாடுடையேம்.

இந்நூலை யச்சுவாகனத் தேற்றிய பின்னர்ப் பன்முறை கவனித்துப் பரிசோதனையை மிக்க ஊக்கத்துடன் செய்துவந்த எமதியற் றமிழ் மாணவர் திரு. R. சிவோகம் ஐயர் அவர்களது உதவியை மிகக் கொண்டாடுகின்றோம்.

எமது வேண்டு கோட்கிணங்கி இந் நூலை மிகவும் அழகாக அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீ இலக்ஷ்மிவிலாஸ் பிரஸ் சொந்தக்காரர் திரு. J. நாராயண ராவ் அவர்களுக்கும், மானேஜர் திரு. K. வாசுதேவன் நாயர் அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக.

இத்தகைய முயற்சியில் எமக்குக் கிளர்ச்சியை யுண்டுபண்ணும் சேலம் நகர பரிபாலனக் கழகத்துறுப்பினர் திறத்துச் சாலவும் நன்றி பாராட்டுகின்றோம்.

அறிஞராயினோர் குற்ற நீக்கிக் குணங் கொள்வாராக.

இங்ஙனம்,

ஆந்திரக்காசியப திம்மப்ப அந்தணனார்.

ஈரோடு மகாசன உயர்தரக் கழகம், திருச்செங்கோடு போர்டு
உயர்தரக் கழகம் முதலியவற்றிற் றலைமையாசிரியரா
யிருந்து இதுகாலை இளைப்பாறுபவரும், வடமொழி,
ஆங்கிலம், கணிதம், சரித்திரமாதியவற்றிற்
பெரும் புலமை வகித்திலகுபவரும், எமதரும்பெறல்
நண்பருமாகிய பிரஹ்மஸ்ரீ ப. வே. இராமசாமி சாஸ்திரியார்
அவர்கள் அளித்தருளிய அபிப்பிராயம்.

Brahma Sri Pandit S. R. Thimmappa Iyer, was kind enough to send me a copy of his latest work திருவேங்கட மும்மணிக்கோவை. This is the first attempt in the Tamil Literature at this kind of composition in praise of the Lord, who presides over Thiruvengatam, the shrine sacred to all India, though there are some similar works on Iswara by the saints and poets of the Saiva school. I read one or two other works by him.

My acquaintance little as it is with Tamil Literature, began with association with my friend and a few men of his type. And from what I have heard from them as well as from my humble study, I can recognise the distinct ring of the Tamil Saint poets and the sweet odour of the classics in his compositions.

The learned Pandit and my humble self have been moving most intimately with each other for the last twenty-five years. His studies in the vast field of Tamil Literature, his genuine and deep scholarship in all branches of the same, and his lucid and sweet exposition of the Tamil classics have ever been on my lips, and, in fact, he has been the type of a scholar and a student which I used to set before my pupils during my career as a teacher.

I have on many occasions requested him to turn his attention to original composition so that the coming generations might be benefitted by the example of a real scholar of the old type imbued with and influenced

by modern ideas and sentiments. I am now glad he has begun well in accordance with the canons and ideals of our ancient land, viz., - composing hymns and songs in praise of the Almighty, and has in his life set an example of the truth of the maxim of the Saint and Poet of the Tamilagam - Thiruvalluvar of happy memory.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

I hope that the appreciation of his present works by the Tamil public would be so encouraging as to prompt him to further activity to enrich our literature in all its branches

(Sd ) B. V. RAMASWAMI SASTRI, B A., L.T.

Bhavani, 25-9-'33

(Late Headmaster, B. H School,
Tiruchengode & Mahajana High
School, Erode.)

எமதாசிரிய பரம்பரையைச் சேர்ந்த கவிஞர்பெருமான்
திரிசிரபுரம் ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது சீடரும்,
மகாவித்வானுமாகிய மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய
கலாநிதி, டாக்டர் பிரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்
அன்புடனருளிய அபிப்பிராயம்.

சேலம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ திம்மப்பையரவர்கள் இயற்றிய 'திருவேங்கட மும்மணிக்கோவை'யைப் படித்துப் பார்த்தேன். இதில் அங்கங்கே பத்துப் பாட்டு, திவ்யப் பிரபந்தம் முதலிய பழைய நூல்களிலுள்ள கருத்துக்களும் சொற்றொடர்களும் பிற்காலத்து நூல்களாகிய அஷ்டப் பிரபந்தம் முதலியவற்றிலுள்ள பிரயோகங்களும் அமைந்துள்ளன. வேங்கடத்தின் பெருமையையும் ஆழ்வார்கள் முதலிய திருமாலடியார்களின் சிறப்பையும், திருமால் தமிழிலன்புடையவரென்பதற்கேற்ற வரலாறுகளையும் இதில் இவர் எடுத்துக்கூறியிருத்தல் பொருத்தமுடையதாக இருக்கின்றது. பழைய தமிழ்ப் பிரபந்தங்களைப்படித்தறிந்து இன்புற்றுவரும் இவர், தாமும் அத்தகைய நூல்களை இயற்றவேண்டுமென்னும் ஆர்வமுடையவராகி ஊக்கத்தோடு உழைத்து வருதல் பாராட்டுதற்குரியதாகும்.

இங்ஙனம்,

(Sd.) உ. வே. சாமிநாதையர்.

---

உரையாசிரியச் சக்கரவர்த்தியும், தென்மொழி வடமொழிக்
கடலை நிலைகண்டுணர்ந்த பெரியாரும், உபய வேதாந்த
நிபுணரும், எமது உழுவலன்புடைய உத்தம நண்
பருமாகிய திருவல்லிக்கேணி பிரம்மஸ்ரீ
வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய சுவாமிகள்
அவர்கள் அனுக்கிரகித்தருளிய அபிப்பிராயம்.

தங்களது மும்மணிக்கோவை, சிலேடை, திரிபு, யமகம் முதலிய அணிகளோடு சொற்செறிவும் பொருட் பொலிவு முடையதாய்ப் பண்டைய சரித்திரங்களைத் தன்னுட்கொண்டு மூர்த்தி வேறுபாடில்லாச் சமரஸம் ஒருபால் ததும்ப, மற்றொருபால் வைணவ மெய்யடியார்களின் சொற்பொருட் கருத்துக்களோடு மெய்யன்புந் ததும்புவதுகண்டு மிக மகிழ்ந்தேன்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) வை. மு. கோபாலகிருஷ்ணன்.

சேலம் முனிசிபல் உயர்தரக் கழகத்துக் கமர்ஷியல் பாடப்பகுதி யாசிரியரும் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய நூல்களிற் சிறந்த பயிற்சி பெற்றுள்ள பக்தரும் எமதன் புள்ள நண்பருமாகிய ஸ்ரீமத் தி. லக்ஷ்மிநாராயணையங்கார் B.A. அவர்கள் தந்தருளிய அபிப்பிராயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமான் திம்மப்பய்யர் ஸ்வாமியோடு அடியேன் சேலம் கலாசாலையில் ஆசிரியத் தொழிலில் பல வருஷங்களாக அமர்ந்திருக்கும் பாக்கியம் பெற்று நாளது வரையில் சமயம் வாய்த்த போதெல்லாம் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்துவந்ததில், ஸ்வாமியின் அபரிமிதமான தமிழ் வித்வத்தினிடையில் ஸ்ரீவைஷ்ணவாபிமானமும் சிறந்து விளங்குவதைக் கண்ட நாள் முதல் அவர்களிடத்தில் அடியேனுக்கு விசேஷ ஈடுபாடு உண்டாயிற்று. சமீபத்தில் தம்முராகிய சமயசங்கிலியில் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் விஷயமாய் அவர்கள் பாடியுள்ள கவிகளைக்கண்டு வியந்திருக்கும்போது, மண்ணும் விண்ணுந் தொழநின்ற திருவேங்கடத்து என்னானை யென்னப்பனெம்பெருமானாகிய தெய்வ நாயகன் அய்யாவர்களின் திருவுள்ளத்திற் புகுந்து தன் திருப்பதிக்கு யாத்திரை செய்வித்து, அவர்களின் கவித்திறனெல்லாம் தன் பரமாக்கிக்கொண்டு செஞ்சொற்கவிகளமைந்த இப்பிரபந்தத்தை எம்போலியாரின் செவிக்குஞ் சிந்தைக்கும் உணவாக இயற்றுவித்தான். அய்யாவர்களும் தமது வாய்மையிழவாது நாப்படைத்த பயன்பெற்றார்.

இப்பாக்கள் தொண்டர்க் கமுதுண்ணச் சொன் மாலைகள் தொடுத்த ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளையும் அவைகளுள் பரிமளிக்கும் ஆழ்பொருள்களையும் நினைப்பூட்டுகின்றன. இப்பெருநல்லுதவிக்கு நாச்சியார் வாக்கின் பிரகாரம் அடியேன் தலையல்லாற் கைம்மாறிலேனே. வேங்கடத்துறைவார்க்கு நம என்னும் பெரியோர்க்கு நம என்று கிடப்பதன்றி யாதொன்றுமறியேன்.

ஸ்ரீமான் அய்யாவர்கள் திடகாத்திரமாய் இங்ஙனமே இவ்வுலகில் நீடூழி எழுந்தருளியிருந்து, ஆங்காங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களை யெல்லாம் தமது திருவாக்கினால் மங்களா சாஸனம் பண்ணிக்கொண்டு தாமும் வாழ்ந்து, அவ்வெம்பெருமான்களையும் அடியோங்களையும் வாழ்விக்க வேண்டுமென்றே மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கும் தாஸன்.

(ஒப்பம்) தி. லக்ஷ்மிநாராயண ஐயங்கார், B.A.

சேலம், 10—12—1933.

'பாலவிநோதினி' பத்திரிகாசிரியரும், உரைநடைப் புத்தகங்
களியற்றும் ஆற்றல் மிக்கவரும், எமது கெழு தகைமை
நண்பரும், செந்திலாண்டவன் றிருவடிக்கண்
முதிர்ந்த அன்புடையவருமாகிய
சென்னை வரகவி

## திரு. அ. சுப்ரமண்யபாரதியாரவர்கள்
இயற்றியருளிய சாற்றுக் கவிகள்

செந்திலாண்டவன்
திருவடி துணை.

[வெண்பா]

1. தண்டமிழ் ஞானத் தலைவனட ராஜனடித்
தொண்டிற் கலைபயின்று தூய்மைமிகக்—கொண்டுயர்ந்த
வாந்திரக் காசியப வந்தணத் திம்மப்பன்
மாந்தரிதங் கொள்ள மதித்து.

2. காசில் திருவேங் கடமும் மணிக்கோவை
நேசந் தருந்தமிழி னோர்ந்துலக—பேசுமொரு
தூயபுகழ் கொண்டான் றுயரொழிந்த வின்பநிலைக்
காயவழி கண்டானிங் காய்ந்து.

3. ஈன்றதன் றந்தை யிராமசா மிப்பெரிய
னான்ற தவமுடைய னாவனெனச்—சான்றுபகர்
செந்நாப் புலவன் றெருண்ஞானத் திம்மப்பன்
எந்நாளு முய்க வினிது.

4. கற்றவரைக் கற்றோர் கவிநிறைந்த நன்னூலைப்
பற்றுவைத் தாதரிக்கும் பண்புடைமை—பெற்றோரே
பெற்றா ருயர்தவத்திற் பெற்றார்பே றென்றறித
லாற்றானண் ணாமலைப்பே ரோன்.

5. ஆதலின் றன்னாசா னாக்கியநன் னூலதனைக்
காதலித் தச்சிட்டுக் கண்டுவந்து—மேதகுதன்
தந்தைதொட் டண்ணனன்றித் தன்குலமு மீடேற்றிப்
பந்தமில்சீ ருற்றானிப் பார்.

---

சைவசித்தாந்த மகாசமாஜ போஷகரும் செம்பியம்-மிராசுதார
ரும், கௌரவ மாஜிஸ்டிரேட்டும், எமதன்பரு மாகிய
பண்டிதரத்னம்-புலவர் ஸ்ரீமத்
திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
தந்தருளிய கவிகள்

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

1. மன்னுபுக ழோங்குதிரு வேங்கடமும்
மணிக்கோவை மகிழ்மீக் கூரச்
சொன்னயமார் பசியதமிழ் மணங்கமழ
மிகவழகாய்த் துலங்கச் சொற்றான்
தென்னவன்சீர் தென்மதுரைத் தமிழ்ச்சங்கப்
புலவனெனுஞ் சிறப்பி னோடும்
உன்னரிய நற்சேல நகரபரி
பாலனக்கல் லூரி தன்னில்.

2. பக்குவநற் றமிழ்த்தலைமை யாசிரியன்
கவிராஜ பண்டி தப்பேர்
மிக்குயரு மாந்திரநற் காசியப
திம்மப்ப மேன்மை யாளன்
தக்கபுக ழியற்றமிழ்மா ணவனண்ணு
மலைக்குரிசில் தகைமை யாளன்
றிக்கனைத்தும் புகழ்பரவ வச்சியற்றித்
தந்திட்டான் றிகழ மாதோ.

---

சேலம் ஜில்லா, வெள்ளாளப்பட்டி வாசரும், சோதிடப் புல
வரும் தமிழ்வித்வானுமாகிய நண்பர்
பிரஹ்மஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமிஐயரவர்கள்
இயற்றியவை.

[அறுசீரடி யாசிரிய விருத்தம்.]

1. கற்பகக் கனியைத் தின்ற கவிகட்கு முணவு நல்கும்
வெற்பகக் கவிகள் வாழும் வேங்கடக்கிரிக்க ணோங்கி
முற்பொலி தேவன் மீது மும்மணிக் கோவை யொன்று
நற்புவி மகிழத் தந்தா னியாரெனி னவில்வன் கேண்மின்.

2. காரணி தவழுஞ் செய்ய சேலமா நகரக் கல்விச்
சீரணி சாலை தன்னிற் செந்தமிழ் வளர்க்கு மாசான்
தாரணி மதுரைத் தெய்வச் சங்கநூற் புலமை யாளன்
பேரணி மறையி ராம சாமிவேள் பெற்ற மைந்தன்.

3. மறுவறு நேர்மை யாளன் மாநிறை செல்வன் சீர்சா
லறுபடை வீட்டோன் வேண்ட வகலிட மளித்த நெஞ்சன்
உறுபுக ழுடையாற் கேற்ற தயாரச முற்ற சீலன்
நறுநறை நிகர்த்த வாக்கான் றிம்மப்ப நாவ லோனே.

4. ஆக்கிய மணிக்கோ வைநூ லருமையைக் கேட்டு முன்செய்
பாக்கிய வசத்தான் மாயப் பவந்தரு குற்ற முற்றப்
போக்கிய வறிஞன் போற்றும் புகழ்க்கலை யருமை தேர்வான்
றேக்கிய மதுகை யாளன் றேவாங்கக் குலத்தின் மிக்கான்.

5. வய்யகம் புகழுஞ் சேல மணிக்குகை நகர வாசன்
றுய்யமா நிறைந்த மேலோன் றொட்டண்ண னருளு
[மைந்தன்
செய்யதன் சீர்த்தி நாட்டுஞ் செயற்கருஞ் செய்கை வல்லான்
அய்யனண் ணாமலைக்கோ வச்சிவிட் டுதவி னானே.

---

தோரமங்கலம் வித்வானும், தமிழ்மொழியின் பல வகைத்
துறைகளிலும் பயின்றுள்ள தேர்ச்சி மிக்கவரும்,
கவிஞர் திலகமுமாகிய

**உயர்திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்**
**மனமுவந்து இயற்றியளித்த கவிகள்.**

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.]

1. உரைசான்ற மாவலியா னிடங்கொண்டு புவிமிசைவா
[னுயர வோங்கிப்
புரைதீர்கோ டென்றிகிரி யேந்துகையான் மலர்வனமேற்
[பொலிதோற் றத்தா
னிரைசேர்கார் முகின்மேவு முருவத்தா னுறுகமலை நேர்வீழ்
[மாண்பால்
விரைசார்செந் தாமரைக்கட் டலைவனையே யொப்பதுவேங்
[கடமாம் வெற்பே.

2\. அம்மலைவா மொருகோவை மும்மணிக்கோ வைகூட்டி
[யார்வங் கூரச்
செம்மைமிகு பசுந்தமிழி னியன்மணப்ப வனைந்தனனச் சீரி
[யோன்றான்
அம்மைமுத லாமிருநால் வகைவனப்பு மமையவெண்பா
[வாதி யாய
விம்மிதமார் பாவும்பா வினமுமகப் புறப்பொருளால்
[விரிக்க வல்லோன்

3\. செழுங்கமல முகைபுலந்த மங்கையர்தம் முகங்காட்ட
[தேனார் தும்பி
யெழுந்துடன்றாழ்ந் திசைமுரன்று புல்லியவ்வு
[டலைத்தீர்க்கு மியல்பு காட்டும்
வழிந்தமது மலர்த்தடஞ்சூழ் சேலநகர்க் கல்லூரி
[மருவுமாசான்
மொழிந்தநட ராசப்பே ராசிரியன் பாற்றமிழ்நூன்
[முகந்து கொண்டோன்

4\. செய்யதமிழ்ச் சுவைத்தேட்டை யெதிர்ந்துவர
[வேற்கும்வையைத் தென்மாக்கூடற்
றய்யநகர்க் கட்பாண்டித் துரைவுறுநிஞ் சங்கத்தே
[தோல்வு றாது
மய்யலறப் பண்டிதனும் பட்டம்பெற்றுளவறிஞன்
[வழிபட்டீண்டும்
வய்யகமா னவர்தங்கண் மதிக்குமிகக் கலைதரும்விண்
[மணியே போல்வான்

5\. ஆந்திரமா மறையவர்தங் குலதிலகன் காவிரிப்பாங்
[கறிவின் மிக்க
மாந்தருறை சமயசங்கி லிப்பதியான் கேளாரு மதித்துக்
[கேட்பப்
போந்தினிய குரலானற் பொருட்பிரசங் கம்புரியும
[புனித வாக்கி
யார்ந்தமணிப் பணிப்பணியா மரன்றாளைப் பணியுந்திம்
[மப்ப வேளே.

6 ஆன்றகல்வி யுயர்செல்வத் தால்வளமா
மெனவுரைக்கு மறிஞர் வாக்கின்
சான்றெனவே யிந்நூலை யச்சுவிமா
னத்தேற்றிச் சால்புற் றானால்
என்றருணைப் பதிவாழ்தொட் டண்ணமகீ
பதிசுதனா மிருமைச் செல்வத்
தோன்றலண்ணா மலையென்னுந் திருநாமம்
படைத்திலங்கு சுமுகன் றானே.

---

செவ்வாய்ப்பேட்டை வைணவசமயத்தன்பரும் எமதரிய
நண்பருமாகிய கவிதாரத்தினம்

## திரு. தா. சுப்பராய செட்டியாரவர்கள்
இயற்றியவை.

[வெண்பா.]

1. தென்சொல் வடமொழி யென்றிரண்டுஞ் சீர்தூக்கி
நின்ற துலையி னிமிர்கிரிமே—னின்ற
பெருமாளை வாழ்த்திப் பிரமன்றிம் மப்பத்
திருவாள னுற்றான் றிரு.

2. நம்மப்ப னாரணனை நன்றாக நாந்தெளியத்
திம்மப்ப வேள்செப்புஞ் செந்தமிழா—மிம்மும்
மணிக்கோவை காக்கும் மணிக்கோவை யேந்தும்
பணிக்கோவா மாயிரவாய்ப் பாம்பு.

3 உடைந்தெறிந்த தேங்கா யுறழ்திங்க ளாமென்
றடைந்தகவி யப்பா லகலு—மிடைகுன்ற
வேங்கடவற் காக்கு மிளிர்மும்ம ணிக்கோவை
யாங்கருதி னின்னமுதே யாம்.

4. குறிஞ்சிக் கிழவன் குமரன்கொண் டாட
இறைஞ்சும் பெருமாளை யேத்தி—யறிஞ்சதமிழ்
மும்மணியி னன்மறைதேர் முன்பன் முயலறத்தா
றிம்மணிடை யேழ்மைக் கெதிர்.

5. மும்மணிசே ரண்ணன் முகில்வண்ண னாமரிக்கே
மும்மணியாற் கோவை மொழிந்ததனைச்—செம்மையினா
லூழிநில வும்புகழ்கொண் டொன்றியவச் சிற்பதித்தான்
வாழியவ னண்ணா மலை.

---

சேலம் லண்டன் மிஷன் உயர்தரக் கழகத்தின் றமிழ்ப் பண்டித
ரும், கணிதக்கலை, ஆங்கில மொழி யாதியவற்றிற் பெரும்
புலமை வாய்ந்தவருமாகிய எமதரும் பெறல் நண்பர்

## பிரஹ்மஸ்ரீ M. S. திருமலைஐயங்காரவர்கள்

பாடியவை.

[நிலைமண்டில வாசிரியப்பா.]

கார்முகில் வண்ணன் கருணை வாரிதி
யடைந்தார்ப் புரக்கு மகில நாயகன்
அளவில்பல் லுயிர்பவ வளக்கரி னீங்கித்
தூயத னடிப்புணை துணையாப் பற்றி
யுய்ந்திட நன்ன ருலகனைத் தும்புகழ்
வேங்கட மீமிசை வீறுடன் மன்னித்
திகழ்தரு கின்றன னாதலிற் றிருந்தப்
பெம்மா னவற்கோர் பீடுடை மும்மணிக்
கோவை யணிந்தே கற்றதன் கொள்பய
னுறவா னினைந்தந் நூலை யோதினன்
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் குறுதி
பயக்குங் கேள்விப் பன்னூ லாய்ந்தோன்
மாடநீள் மதுரை மன்னிய சங்கம்
பரிவுட னளித்த பண்டிதப் பட்டமுங்
கற்றோர் மதிப்பும் பூண்ட கண்ணியன்
சேலமா நகர்க்கண் டிகழ்கல் லூரியிற்
றனித்தமிழ்ப் புலமை தகவுற நடாத்துஞ்
சொற்றிற னேய்ந்த சொற்பொழி வாளன்
கன்னலும் விரைமலர்த் தேனுங் கைத்திடக்
கடிதினிற் கவிபல கவினுறப் புனைவோன்

ஆன்றோ ரவைக்க ணவிர்மதி மானக்
கண்டோர் களித்திடக் கழறுநல் வாக்கி
கல்லுங் கரைந்து மெல்லநீ ருகுப்பப்
பட்ட மரமுந் தழைக்கப் பாடு
மின்னிசைக் கண்ட னொன்னெஞ் சகலா
வரும்பெற னண்ப னிரும்புவி யேத்துந்
திம்மப் பனனெனுந் திண்கலை யோனே.

[கலி விருத்தம்.]

வேங்கட மும்மணிக் கோவை வீங்குநீர்
தேங்கிய மாநிலந் திகழ வான்பொருள்
பாங்குற வச்சிடற் கீந்த பண்பன்சீர்
ஓங்கணு மலைவள முற்று வாழியே.

---

வைணவசமய அன்பரும், கம்பராமாயண ஆராய்ச்சியிற்
சீரியதேர்ச்சி பெற்றவரும் எமது நண்பருட்டிலகம்
போன்றவருமாகிய ஈரோடு

## திரு. M. R. சுப்பராயலு ரவுத்து அவர்கள்

இயற்றியவை.

[வெண்பா.]

இருவினையின் நீங்ககல விவ்வுலகம் போற்றுந்
திருவேங் கடத்திற்கே செய்தான்—கருநீக்குந்
தெள்ளமுத மென்றோதச் சீர்மும்ம ணிக்கோவை
யள்ளுந் தமிழ்மொழியி னுய்ந்து

இம்மணிக் கோவைதனை யின்பமுட னேயிசைத்தான்
திம்மப்ப வந்தணனுஞ் சீருடையோ-னெம்மதுரைச்
செம்மைசேர் சங்கத்திற் றேர்ந்த கவிராச
னெம்மையுல கும்புகழ வேன்று.

கல்விப் பொருடன்னைக் கண்யமென வேவுணரும்
மல்குபுக ழண்ணு மலையண்ணல்—நல்கினு
னச்சிலிட விந்நூலை யன்புடனே யாம்பொருளை
யிச்சகமே போற்ற விசைந்து.

திண்டிவனம் உயர்தரக் கழகத்தின் தமிழ்ப் பண்டிதர், வித்வான்
திரு. பழனிசாமிச் சிவாசாரியாரியற்றியது.

(கட்டளைக் கலித்துறை.)

செம்மைப் படுங்கலை ஞான முயர்திரு சேரவரும்
இம்மைப் பெருந்துய ரேகும் பிறப்பு மிறுதிபெறும்
நம்மைப் புரந்தருள் வேங்கடத் தண்ணலி னற்றுதியாந்
திம்மப்ப வாரியன் மும்மணிக் கோவையைச் செப்புமினே.

---

எமதரிய நண்பரும் ஓமலூர் V. C. உயர்தரக் கழகத்தின்
உதவித் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீமத் D. வீரராகவ
ஐயங்காரவர்கள் தந்த அபிப்பிராயம்.

(கட்டளைக் கலித்துறை.)

எம்மப்ப னண்டவன் வேங்கட னேரெழிற் றூட்குயர்ந்த
தம்மொப்ப ரில்லாத் தகையா ரிருவர்தம் பாவெனவோர்
மும்மணிக் கோவைபு னைந்தானம் மூர்த்தி முகமலரத்
திம்மப்ப னந்திர வந்தணத் தீங்கவிச் சிங்கவேறே.

---

# திருவேங்கட மும்மணிக்கோவை.

## காப்பு.

### ஸ்ரீ விநாயகர்.

[இருவிகற்ப நேரிசை வெண்பா.]

சீரார் திருவேங் கடவெற்பின் செல்வன்ற
னேரா ரிணைக்கழன்மீ தென்றுமே—பேராரு
மோர்மும்ம ணிக்கோவை யோதுதற்கு வேழமுகத்
தோர்மருப்ப னுற்றுதவு மோர்ந்து.

## நூல்.

[நேரிசையாசிரியப்பா.]

உலகனைத் தும்புக ழுலகிலாச் சீர்கெழு
வண்டமிழ் மொழிக்கோர் வடவெல்லை யாகித்
தாவிலாக் கொடைசேர் மாவலி யின்பால்
மூவடி மண்பெற் றோவின் றுயர்ந்த
நீல நிறத்து நெடுமால்! நினைநிகர்
வேங்கட வெற்பினி லோங்கி விளங்கிடும்
அப்ப! வென்ற றொப்பிலா மணியே!
குலவிடு வரந்தருங் குலமுதற் றேவே!
மருவிடு மடியவர் மாண்புறு நிதிய
முற்றிட லானு முறுபவர் பவவினை
யிரிதர லானு மொருபேர் வேங்கட
மிளிர்ந்த தன்றிநின் னளிர்தடஞ் சாரற்
சார்ந்த விலங்கின மார்ந்த சாதியு
முத்தியை யுறுதற் கொத்த நலஞ்சேர்
மகிமை யனைத்துமிம் மகிவழு வின்றி

நன்கெடுத் தியம்புமேற் புன்செய லெளியேன்
மற்றதன் வளமை வழுத்துதலி யாங்ஙனம் ?
ஆயினு நின்ற னடியிணை யுதவிய
மதியினை மனத்தகம் வயங்கப்
பிணித்தொரு வகையாற் பேசலுற் றனனே. (1)

[இருவிகற்ப நேரிசை வெண்பா.]

உற்றிடுமோ ! வல்வினைக ளென்றுதிரு வேங்கடவற்
பற்றியிது தீதாகும் பார்க்கினது—நற்செயலென்
றையப் படாதே யனைவர்க்கு மாய்நின்ற
வையனவற் கன்புசெய்வா ரை. (2)

[கட்டளைக் கலித்துறை.]

வாரெழிற் கொண்டொளிர் மாண்மின்று சங்காட்டி மன்
முழங்கிச்
சீரெழில் வேகத் தொழின்மிகுத் தேநன்று சேர்தருங்கார்
நீரெழில் வான நிகர்த்திடு மின்னை நிமிர்தரக்கொள்
ஓரெழில் வேங்கடத் தோங்கு வளங்க ளுரைப்பரிதே. (3)

[நேரிசை யாசிரியப்பா.]

உரைமுக் காலமு மரிதி னறிந்தபி
ஞானுனித் துணர்ந்த நுண்ணிய ரறிவுபோன்
றோங்கி யுயர்ந்துள வீங்குறு சிமயப்
பொருப்பினின் றிழிதரும் பொற்பமை யருவி
மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
யணிமுலைத் துயல்வரூஉ மாரங் கடுப்ப
வருக்கையு மாவும் வாழையும் வழையுங்
கருங்காற் குறிஞ்சியுங் கணிநாள் வேங்கையு
மாரமுஞ் சாந்து மணியகிற் றருக்களும்
பால்வெண் கோட்டமு மேலமு மிருப்பையும்
வேயும் வெட்சியு மாய்பூந் தில்லையு
மொண்ணிணர்ப் பிண்டியும் வள்ளிதழ்க் காந்தளு
நறுஞ்சண் பகமும் நறையு நாகமும்
வள்ளியு மாலுஞ் சுள்ளியுஞ் சூரலு
மார்மா ரோடமு மேரி லவங்கமுந்

தனபாற றழீஇத் தானிறு மாந்து
பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமு
மயிலடி பொருவு மாக்குர னொச்சியு
மைவனச் சாலியுங் கைவளர் கரும்பும்
மஞ்சளுங் கிழங்கு மலிதிப் பிலியுஞ்
சிற்றிலை நெல்லிச் சிறுகாய்த் துணரும்
பெருந்தேன் றொடையலும் விரைந்து கொண்டளைஇத்
தரைக்கணுள் ளோர்க்குத் தலைவயி னுய்க்கும்
நொடிவிலை மாந்தரி னுகர்பொருட் கொண்டு
நிலனிட னெளிந்திட நெகிழ்ந்து பாய்தரு
வேங்கட முற்றமர் தீங்கடு தேவ !
எல்லையி லாதுறு தொல்லைப் பிறவித்
துயர்தப நின்ற னுயர்திரு நோன்றாட்
டலைமிசைப் பொறித்துத் தமியேன்
கவலை தணிப்பாய் கமலநேத் திரனே. (4)

[இருவிகற்ப நேரிசை வெண்பா.]

திரமுறலாம் நெஞ்சே ! திருவேங்க டத்தை
யுரமுடனே யுன்னி னுறுதி—கரமவனை
யேதொழுக கான்றிடுக வீர்ம்புனலைக் கண்ணிணைவா
யேதொழுது வாழ்த்திடுக வே. (5)

[கட்டளைக் கலித்துறை.]

வேதனை யீந்தவன் வேங்கட வாணனின் வெந்துயர
வேதனை நீக்கிப்பின் வாழுவைக் குங்கோ வினையொழிக்கும்
வேதனை யானை விரும்பித் தொழுதிடு வேண்டுவன
வேதனை யன்பான் மிகவும் வழங்குவன் வேதரசே. (6)

[நேரிசை யாசிரியப்பா.]

வேத மோதிடு நாதவந் தனரு
மேனை யன்பரு மெல்லாஞ் சூழ்தந்
தார்த்திடு வேங்கட! நாரண! வமல!
வேந்தகோ விந்த! காந்திமு குந்த!
பந்தந் தவிர்க்கு நந்தன் றனையா!

பைந்தமிழ்ப் பின்றொட ரைந்தலைப் பணியோய்!
என்றமாற் றங்க ளொன்றியென் னெஞ்சந்
தழலினை யெதிர்கொ ளிழுதினை நேர
வன்பா யுருகி யின்பந் தழைப்ப
வக்கண மெனைமறந் தொக்கவுன் மயமாய்
நளினத் தினைவெல் குளிர்மென் றாளும்
வேழக் கைபழி வாழைக் குறங்குங்
காந்தட் டுரந்திடு நாந்தகக் கரமும்
பொருப்பினைப் புறம்பழி வரைத்திரு மார்பு
மெழுவினை யோட்டிய விழுத்திண் புயமுஞ்
சுடரினை யிரிக்குந் தடமென் குழையு
மறையொலி மடுக்கும் வார்கொள் செவியுங்
குமிழினைக் கடிந்த தமிழ்மண நாசியு
மன்பர்க டமைவாழ்த் தின்பமர் வாயும்
பவளத் தினையிகழ் பசிய விதழுந்
தரள மொளித்திடு தந்த பந்தியுங்
கருணையூற் றிருக்கு மருணய னங்களுஞ்
சிலையினைப் பழித்த நிலைகொள் புருவமு
மறிவி னிலைக்கள மெனவே யறையத்
தகுமென் னுதலும் நகுவெண் டிங்கள்
நாணுதற் குற்ற மாணமை முகமு
மிந்திர நீல மிரிதரற் கொத்த
குஞ்சியின் வனப்பு மெஞ்சுத லின்றி
நேர்படக் கண்டே நிலைதடு மாறி
விதிர்விதிர்ப் பெய்தி யதிசய மிகப்பெற்
றவச மாயின னடியேன்
எனைவேங் கடவ! ஏற்றளிப் பாயே. (7)

[இருவிகற்ப நேரிசை வெண்பா.]

அளிப்பானு மாக்கி யழிப்பானு மன்பர்
களிப்பினுற் றன்னையே காண — அளிப்பானும்
வேர லினமுத்து விண்டிரும் வேங்கடத்தே
யார வமர்ந்தவரி யாம். (8)

[கட்டளைக் கலித்துறை.]

யாமமு குந்தனைப் பாடுதற் கேற்ற வெழிலுற்றனம்
யாமமு மெல்லியும் வேங்கடத் தேநின்ற வீர்ம்பொழில்வா
யாமமு சுக்குல மார்ந்து திரிந்திடு மார்கருணை
யாமமு தம்பொழி யப்பனை வாழ்த்துவ மாதரித்தே. (9)

[நேரிசையாசிரியப்பா.]

ஆதர மிருதரக் கோதறு மலர்க
ளிலகுநந் தனவனம் பொலிய வமைத்துத்
திருப்பணி திருத்திக் கருப்பிணி யொழிந்திடத்
திருநெடு மாலே யரும்பெருந் தலைவனென்
றுன்ற நூலோர் தோன்றிய கழகத்
தரியரு ளாலே விரிய வுரைத்துப்
பொற்கிழி தானுய்ப் போந்து வளைந்திடப்
பண்ணிய புண்ணியப் பட்டர் பிரானோ?
தானணி மணஞ்சேர் தருதுழாய்க் கண்ணி
வடபெருங் கோயி லுடையாற் கணிந்து
மற்றவ னருளாற் கற்றவர் மகிழ்கொளப்
பாவை திருமொழி கோவை யுறவருள்
புரிந்துமற் றவனிற் பொருந்திய கோதையோ?
கொல்லிகா வலனுய்க் கொற்றம் படைத்து
மூவேந் தர்க்கு முதன்மை யாகிச்
சேரநா டதனைப் பேரர சாண்டு
வைணவ வன்பரி னுண்மையை வையம்
பெரிதா மதித்திட வரவக் குடங்கொண்
டுட்புகச் செலுத்திக் கரத்தினை யூன்றி
யதுதீண் டாமையை யாற்ற வுணர்த்திட்
டிராம பக்தியை யெழிலுறக் காட்டிய
குலசே கரனும் பொலிவுடை வேந்தோ?
கணிகணற் கருளிக் குணித்து மதங்க
ளவற்ற தியல்பினை யைய மறக்கண்
டொன்றிய சிவவாக் கியப்பெய ருடனே
சைவ நூல்சில சார்ந்தியற் றியபினர்ப்
பேயாழ் வாராற் பேதுற றவிர்ந்து
சுக்திஹா ரற்குத் தூய்கவ சத்தை
வாகா யீந்துதன் யோகார் விச்சையைக்
காட்டிய தோடு நாட்டு கொங்கண
சித்தற் குத்தன் னத்துடற் றுகளாற்
கல்லினைப் பொன்னாக் கித்தருங் கலையைக்
கற்பித் தவன்றனைப் பொற்பவாழ் வித்து
வெஃகா வெழுந்தரு ளிறைதான் வெஃகித்
தன்பின் றொடா வின்பமை தமிழாற்

றிருக்கவி பாடிய திருமழி சைப்பெயர்
நிறுவிய கீர்த்தி நெடுந்தகை தானோ ?
தேவ தேவியின் மையலிற் றிளைத்தும்
மனப்பர மற்கே தினமொப் பித்துத்
தொண்டர் தூளியாற் றூய்மை யுறப்பெற்
றரங்கனைக் கல்லு மிரங்கிடு பாக்களாற்
றெருண்டாற் றியபெருந் தொண்ட ரடிப்பொடி
யென்னு மின்குண மன்னடி யவனோ ?
சாலியின் கதிரிற் றுனவ தரித்தே
தாழ்குலத் தவனு லாழ்பசி நீங்க
வான்பா லாதிய போனக மார்ந்தே
யாழின் வகையாற் றுழா தரங்கனைப்
பாடியுய்ந் திட்ட பாணர் பிரானோ ?
ஆண்டான் வடிவுமெய் யடியா ருருவு
மொளிப்பிழம் பென்ப துண்மையே முற்று
மென்றவா கமமொழி துன்றிய காட்சிக்
காட்டா வகுத்துக் கவின்மா றனைமுன்
சோதியாக் கண்டு தொண்ட னாகி
யதிசுவைக் கவியருண் மதுர கவியோ ?
மங்கை யம்பதி மன்ன னாகி
வாள்வலி தன்னான் மந்திரங் கொண்டு
பெம்மான் பரிசம் பேருப தேச
முற்று றங்க முறவே யமைத்துத்
தமிழ்மறை தழைக்க வமிழ்த நிகர்த்த
பனுவல்க ளியற்றிய பரகா லனெனும்
பத்திப் பெருமிதப் பாவல னேயோ ?
பொய்ம்மை யிரிதரப் புவியினர்க் கருளிய
பொய்கை யுதித்த பொய்கை யன்பனோ ?
மாதவி மலரிற் போத முதிக்கத்
தீதற வுதித்த பூதவடி யவனோ ?
திருமயிலை யிற்செவ் வல்லித் திருமலர்
வந்தவ தரித்தே முந்தார் வத்துடன்
பரமனை மற்றைப் பாவல ரிருவர்
பாடிய வதனாற் பார்த்தமை யருளிப்
பெருங்கவி வகுத்த பேயாழ் வாரோ ?
ஆரிய மறைகளி னாழ்ந்துள நுண்பொரு
ளறிந்திம் மகிதல மறிகுள குண்டன
மன்னு மகிழ்ச்சியி னீங்கி மன்னிய
ஞான மோன தானத் தினையுற்
றிறைவன் றிருவருள் குறைவற வமைந்துயத்

தேனினும் பாலினுந் தீஞ்சருக் கரையினு
மினித்துள மாறு மனத்துய ரகற்றுந்
தென்றமி ழுதனிற் றீஞ்சுவை யொழுகப்
பாடி யருளி வீடுபேற் றியல்பினைப்
பனுவல்க ளுன்கா னனியோங் கிடவே
தெருட்டி யருளிய குருகைப் பிரானே?
தனித்தனி யவற்றின் சார்பொருள் விரித்த
முன்னிய வேத முனிவர்க டாமோ?
விசிட்டாத் துவிதக் கொள்கை விளங்கப்
பிரம்மசூத் திரமா பாடியப் பெற்றியைத்
தெள்ளிதி னியற்றித் தெய்வகீ தைக்கோர்
விரிவுரை நிகழ்த்திய வேதரா மானுச
வுத்தம வித்தக வுடையவர் தானே?
அரங்கம் வேங்கட மழகார் சோலை
மலைநூற் றெட்டுத் திருப்பதி மாற்கோர்
கட்டமு தங்கடியட்டப் பிரபந்தந்
திருந்திட வமைத்த திவ்விய கவியாம்
பிள்ளைப் பெருமா ளனுமறைப் பெரியனே?
வேற்றுநா டுகளினும் வீற்றுவீற் றிருந்தே
தத்த மொழுக்கிற் றும்வழு வின்றிப்
பத்தி யாற்றியே முத்தியை யுற்ற
தொண்டர்க டாமோ? தூய விவர்களுட்
செயற்கருஞ் செய்கை செய்தவ ரார்கொ?
னன்னர் விளங்கிட நவிலுமி னமர்காள்!
அன்னவ ருந்திறன் முற்று மறித
லொல்லா தேனு மொன்றிய வகையா
லன்னே ருணர்த்திய வருநெறி கடைப்பிடித்
தரும்பா சங்க ளிரிந்து கழன்றிட
வேங்கடச் சிலம்பினி லோங்கி வீற்றரு
ளெம்பெரு மானை யிறைஞ்சுதுந்
தெளிந்திட வம்மின் செகத்துள் ளீரே. (10)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

உட்டெளிவை யாக்குதலா லுண்ணீர்மை யோங்குதலாற்
கட்டபுல னேவாரைக் காட்டிடுநற்--புட்சிலம்பு
நீர்நிலைகள் கொண்டதிரு வேங்கடத்தை நேர்ந்திடுமின்
பார்வினைக ணீங்கும் பரிந்து. (11)

(கட்டளைக் கலித்துறை.)

பரிந்து நெகிழ்ந்து பரவிய வன்பொடு பார்மகளைத்
திரிந்திடு கோட்டிடைத் தேவ! வமைத்துப்பின் நீயசுரன்
புரிந்தளிக் கப்பின் புவியை யளந்தனை புண்ணியனே !
தெரிந்திட வேங்கடச் சீதர! செய்யாய் திருவருளே. (12)

(நேரிசை யாசிரியப்பா.)

திருவருள் கொழிக்குந் திருமால்! நின்கழல்
தாங்கி மேற்கொண் டோங்கிய வேங்கடங்
குவளை மடுத்துக் கொடுமரந் தாங்கித்
தாமரை யனந்தனைத் தான்பெற லானைப்
போன்று மிளங்கலை யணிபிறை பூத்த
விலைவடி வேலங் கணிதலை யேற்றுப்
பெருமித முறலா லன்றனை நிகர்த்து
மோர்மா லாய்ப்பி னீர்ஞ்சசி தழுவி
வச்சிர மார்ந்துத னுச்சியிற் புகர்மா
வுறலா லிந்திரற் குவமை யாகியும்
வள்ளி புணர்ந்தே மயின்மேற் கொண்டிட்
டாறு முகமா யமைத லாற்சிவ
குமரனைச் சிவணியு மமர்ந்து நாற்றிசை
முகமுற லாலெழி றிகழ்கலை யினங்கை
யேறிட வாரணம் வளர்ந்திட வெண்கணி
யங்குற லாலன முயர்த்த வயன்றனை
நேர வமைந்தும் நிழலுற லானே
யறந்தலை மிளிர்ந்து பிறங்குநின் னியலை
யுன்னுந் தோறு மூற்றெனக் கண்ணீர்
பாய்தர வுள்ளம் பரவச மாகிநல்
லப்பொடு சேர்ந்த வுப்பே போல
வாயின னடியே னடியார்க் கெளியை
தெளியுநர்ப் புரக்கு மளிமிக வுடையை
யென்ப துன்ற னியற்கை யாகலிற்
சரண்புக் கேனைச் சார்வாய்க்
கடைக்கணித் தருளிக் காத்தளிப் பாயே. (13)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

தாயாய் மகிகவர்ந்த பாவியைக் கொன்றுடனே
பாயாய்ப் பரப்பியரு டக்கோனே! —ஆபா

விதனை யகமகிழ்வர் வேங்கடவ! வான்றோர்
நிதமுணரார் நீசர் நிசம். (14)

(கட்டளைக் கலித்துறை.)

நிசமறி யாதவர் நேயத்தை நெஞ்சமே! நீதவிராய்
கசமறிந் தோலிடக் காத்தமை யொன்றே கரிபுகல
வசமறி யன்னவ ரந்தோ! வறியா ரவலமன்றோ?
வசமறிந் தேன்வேங் கடவநின் னேங்கருள் வாழியவே. (15)

(நேரிசை யாசிரியப்பா.)

வாழ்வீ டருளு மேழ்கிரி வேங்கடம்
புரைதபுத் துயர்ந்த கரையி றவத்தோர்
கேள்வி நான்மறை வேள்விச் சான்றோர்
நைவினை யகற்று மைவகை மகம்புரி
மனையற வாழ்க்கையின் மாட்சி யுயர்ந்துளோர்
நல்லற நூல்களி னயம்பல நாடி
யுயிர்க்கொலை துறந்துபி றுயிரினும் விழுமிய
வாய்மையின் வழாது மாய்வினை வளர்க்குங்
கள்ளுங் கவறுங் காமமுங் கடிந்து
செற்றம் போக்கிய நற்றுறை நின்றோ
ராணவ மறுத்திடு நீண்மா லன்ப
ராதிய வான்றோர்க் கரும்பயன் பலவு
மளிப்பதே யன்றி யன்பிலாக் கயவர்
புள்விலங் காய வெள்ளினங் கட்கு
முத்தியை நல்கல் சத்திய மாகவு
மிப்பெற் றியினைத் தப்பறக் கொளா அது
புதுவன வகுப்பான் புக்கசிற் போலிகண்
முன்னோ ரியாத்த நன்னூற் களின்க
ணைய மிகக்கொண் டவற்றிற் காணும்
பொருளினை யிகழ்ந்து மருடலை மேற்கொண்
டறத்தினைப் பழித்தன் மறமணை நாட்டல்
சாதியா சாரத் தகைமையிற் றிருத்த
மென்ற விவற்றினை யெண்ணிய வாறே
புரிந்திட முயன்றுயர் தெய்வப் பொலிவினை
யறவே யொழித்திட லுறுவா ராயின

றென்னே யிவர்தஞ் சூழ்ச்சி யிருந்தவா
றிருங்கலி யின்சீ ரிலைதாம் போலு
மன்பநின் றிருவுள முள்ளவா றறியே
னடுநிலைப் புத்தே ணீயே யாகலின்
றகவல வற்றைத் தக்கவா மாற்றி
நல்லோ ராயினு மல்லவ ராயினும்
நிமல! வெவரே யாயினு நிரயம்
புகாவகை நாடிப் புரத்த
னெடுந்தகை யச்சுத! நின்றலைக் கடனே. (16)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

கடனளின முற்றுற்போற் கார்மேனி யங்க
வடவேங்க டத்தேவே! வந்து—திடனு
நரகவன னீணிரய மார்விக்கும் நல்லோர்
நரகவன நாடாம னுடு. (17)

(கட்டளைக் கலித்துறை.)

நாடுக ளிற்சிறந் தோங்குவ திந்திய நற்பதியாம்
பாடுவண் டார்க்கும் மலரு ளரசு பதுமமலர்
தேடுறுந் தேவர்க டேவாய்ச் சிறந்தவன் சீரிதான்
வீடுறு வித்திடும் வெற்பினின் மிக்கது வேங்கடமே (18)

(நேரிசை யாசிரியப்பா.)

கடகரி பெருத்தக் குடமத் தகமிகப்
பொலியவிற் றிருக்கு மிலகொளி வேந்தருங்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய
பானைய ராகிப் படுதிரை வையகங்
காணவிம் மைக்கட் கழிய வையமேற்
றுண்ப ராமெனி னொருபொருட் டாக
வமைத்தாய் தாற்குச் செல்வ மாகுமே?
யன்றே; யாகலி னதன்க ணிச்சையைத்
துறந்திட் டுய்யத் தூய்நெறி யொன்று
கல்லா ஞானக் கடையே னாயினுந்
தொன்னெறித் தொழும்பர் நன்முறை களினலங்
காட்டிய தனையே காட்டாக் கொண்டுடன்
சின்மதிக் கெட்டிய வாறுரு சிறிதிங்
குரைத்திட விரும்புவ னமர்காள்! உவந்து
பெருநதி குடைந்தோ ராருவிப் புனலகந்

திளைத்திட லுறுங்கா லதனைத் தெழித்திடா
ரென்பதே போல வேற்கவேண் டுவனா
லதுதான், சம்பர னதிமா யம்விட
மாழ்ந்து புரோகிதர் சூழ்ந்திடு வஞ்சகம்
மாசுணம் பல்படை வார ணந்தழ
லம்பரங் கடுங்கா லென்றிவை யனைத்து
மாண்டி விளைய னறிவிற் பெரியோ
னாய பத்தி யான்ற பெருந்தகை
பிரகலா தப்பே ரரும்பெற லடியனை
யெள்ளத் தனையு முள்வருத் தாமே
நன்று புறந்தரற் கொன்றிய தாகு
மரிய பெரிய திருமந் திரமாங்
குலனரு டெய்வங் கொள்கை வெறுக்கை
நீள்விசும் பிருநில மாதிய நிகழ்த்தித்
துறப்ப ருந்துயர் தொலைத்திட் டன்பரை
நித்திய சூரிக ளுடனா நேர்தரப்
பரம பதத்தினை யருளிக் காத்திடும்
விண்ணவர் மண்ணோர் விரைந்தணு கிப்பே
ரன்பின் வழிபா டாற்றும் பண்புறு
நம்வேங் கடவ னாரா யணாவெனு
மொருபெரும் புணையினை யொன்றி யறிவாங்
கோலினை யூன்றி யேலா விடும்பைப்
பிறவிப் பெளவம் பெயர்ந்தவன்
பொற்கழ லாங்கரை யுற்றிடு வதுவே. (19)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

வேதந் தமிழ்செய்த வித்தகமா றன்பாக்க
ளோதந் தவிர்க்கு மிருமருந்திங்—கோதுதிரேல்
வேங்கடவற் கன்பாவீர் விள்ளுவினை பேரின்ப
மாங்கணுக்கு மிஃதுண்மை யாம். (20)

(கட்டளைக் கலித்துறை.)

ஆந்தனைக் காலத் தரியை மறவே லரியநெஞ்சே!
வேந்தனை வேங்கட வித்தக னைவென் விமலனைநீள்
காந்தனை மாணியைக் கப்ப முகுந்தனைக் கண்ணுறவே
சாந்தனை யும்போந்து சார்பிணி யோடுஞ் சரதமிதே. (21)

(நேரிசை யாசிரியப்பா.)

சரமுறு வலினாற் றிரிபுர மெரித்த
விரிசடைக் கடவுளுங் கரியரு டேவனு
மாய நீவி ரிருவிரு மாற்றிய
வருட்செயல் களிற்றிக ழற்புதத் தாலிரு
வுருவே றாக விருப்பினு மாய்ந்திடி
னவையொன் றாகி யவிருமுடி வின்க
ணொன்றல் சுவானு பூதியா மின்பக்
கிளைத்திடு மான்றோர் தெளிந்தநற் பொருளா
மாகலி னவைதமு ளாரா வார்வந்
துரப்பவென் னெஞ்ச முருகியே யொருசில
வவ்வடி வுணர்த்திய வருடலைக் கொண்டே
யொருவிவேற் றுமையி னுரைக்கலுற் றனனாற்
சைவர் சிலர்க்குத் தகுதியின் வேறாய்த்
தோன்றுமிஃ தாயினுஞ் சுகப்பே ரின்ப
நிட்டையி னின்றோர் நெறிதனைப் பற்றிக்
கூற்றது விடுத்தென் கொள்கை குறிக்குவ
லதுதான், றிருவருட் செல்வ னாகிய
வன்பன்மா ணிக்க வாசகற் காகிக்
கயிலையை நீத்தே காசினி போந்திட்
டருளினன் முக்கண னொருபெருந் துறையினி
லடியார்க் கெளிய னாக லானே
திருநெடு மால்!நீ திகழ்கோ பன்ன
வாந்திர பக்த வந்தணன் பொருட்டா
நின்னிலை நீங்கி நிகழ்தாணி ஷாவுழைச்
சென்று சேவகக் கோலஞ் செறிந்தவற்
குறுபொரு ளிறுத்தனை துருக்காட் டினையா
லொருத்தி சிரத்தை யுவந்துவீற் றிருப்பப்
பாகத் துமையைப் பரித்தன னரன்று
னின்றன் கிடக்கையி னீள்சிரத் தருகா
நிலமக ளிருப்பத் திருநிற நிறுத்தினை
அருமறை யாரிய வரும்பொரு ளறத்தை
மோனத் தவநிலை யுற்றுநான் முனிவர்க்
காலி னமர்வுற் றன்றுரைத் தனன்சிவன்
நரநா ரணனென விருவுருத் தாங்கிப்
பதரிகாச் சிரமப் பழுவப் பாங்க

றுயர்பெருந் தவத்தை யுஞற்றினை யொருநீ
சங்கர நாரண னெனப்பெயர் தரித்து
வியக்கும் வடிவுடன் விளங்கினன் பிஞகி
முகமா றுடைய முன்னவன் றலமெனப்
பேசக் கிடந்துபின் மாசி லுடையவர்
திகிரி வளைகளை நின்முன் றிகழ்ந்திட
வமைத்த வளவினி லவைதமை யேற்றுத்
திருமாற் கோலஞ் செறியநின் றனைநீ
அருச்சுன னடியுண் டகிலமெ லாம்படப்
பரந்த தன்மையைப் பாரித் தனனர
ஞய்ச்சி மத்தா லடியுற் றேநீ
யுலகத னைப்பெற வுவந்து நின்றனை
யலைகட லீந்த கொலைக்கடுங் கடுவை
யுயிர்களுய் தற்கா வுண்டன னிறையோன்
மாசி லன்புடைக் கேசவச் சாமி
யெனுநல் லோன்பொருட் டெழி லுருக் கறுத்துக்
கடுவார்ந் ததனைக் காட்டினை யானீ
நீக்குபூ மோந்த பிழையினை நீப்பான்
மாதொருத் தியரு வளைதிகழ் தன்கரந்
துணிக்கப் பெற்றரன் றாயரு ளுற்றனள்
ருதய ருங்கா லோது தன்னையு
மறந்திறு மாந்தத னிடக்கையை நீட்ட
மறுத்தனர் பிரசாத மாலருச் சகர்தாஞ்
சென்றிடச் சாத்துவிகச் செம்மனள் ளிரவி
லரவணைச் செல்வ! தன் னருங்குறை தவிர்வா
னமைச்சற் கொண்டுகை குறைத்தலை யார்ந்தனன்
அருச்சுனன் வீம னரகரி யன்ப
ஞதிய வின்ஞோர் தீதற நும்மிரு
திருவடி போற்றி யொருவடி வுண்மை
தெள்ளிதி னுணர்ந்துய ரொண்பத மேய்ந்தன
ராதலி னஃதுணர்ந் துய்க வகில
மென்றது வேயா மாகலி னிலங்கு
மோங்கற நிறுவிய வேங்கட வாண!
அருளே வடிவாந் தெருட்கலை யன்ப!
பவத்தினை வேர்களை தவத்தினர் நண்ப!
மூர்த்தி வேற்றுமை முற்று மொழித்திட்
டுய்வா னன்பர்க் குதவிடத்
திருவுளங் கொள்ளாய் பெருந்தகை யோயே. (22)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

தகைப்பரும் பாவங்க ணீத்துத் தருமத்
தகைப்பரும் ஓங்காரந் தானாய்—வகைபுணரும்
வித்தகர்க்கே யுற்றுணர நின்றனையால் வேங்கடவ!
வித்தகம ரம்மான வே. (23)

(கட்டளைக் கலித்துறை.)

வேங்கட வாழ்பவ னைத்திருக் கோடிட வேண்டியடை
வேங்கட வாரணக் கொம்பொடித் தோற்பற்ற விண்டுவினை
வேங்கட வாதவ னாருட் போற்றுவம் மீண்டுதவ
வேங்கட வாதனை வீந்தொழி யும்முற்ற மேன்மையரே (24)

(நேரிசை யாசிரியப்பா.)

மையரி நெடுங்கட் டிருவமர் மார்ப!
மையலை யிரித்தும் வெய்யிலை யொளித்தும்
பைம்பொற் றேர்விடு பாக னாகியுங்
கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளா
ரும்மா வலுட னுளநனி வேட்ப
மொழிவ தாஞ்சொ லென்ற மூதோர்
கூற்றினுக் கேற்ற குறியா யமைந்துநல்
விழுமெனு மொழியாற் பழுதறு ஞான
போத நிரம்பிய கீதை யருளியு
மைத்துன முறைமையின் மாண்விளை யாடலைக்
களிக்க வயர்ந்துங் கவின்விச யனைமுன்
னகலா திருந்தே யாச வருளினை
யிலங்கையி லொன்னா ரிலங்கயி லழியவக்
கயவரை மிகவுயர் கயவரை யெற்றியுங்
கைதவ ரைப்பொரு கைதவர் வீழ்த்தியு
நாண்ணைக் கொண்டவர் நாண்ணைக தெறித்தெதிர்
ஆசுக முய்த்திட ஆசுக மாக்கியும்
பகையறுத் திங்ஙனம் வகையற நிறுத்திய
வன்பே கலையே யின்ப வறிவே
நுண்மா ணுழைபுல நண்ணிய குறிப்பே

யெனுமிவை யொன்றாய் மனுமுறை யறனொடு
கவினுருப் படைத்துக் காணநிற் றலைநேர்
வாயுகா தலன்றனை நேயமாக் கொண்டவற்
கென்றுஞ் சிதையா வாணா ளீந்தனை
பச்சிளம் பால னச்சர வச்சொற்
செவிசுட வக்கணந் தவிசு துறந்திட்
டருங்கான் போந்துய ரிரும்பெ ருந்தவ
மாற்றிநின் னையக மாற்று துன்னிட
வழங்கினை பெரும்பதம் வாசு தேவா!
விண்ணவர் தலைவ! வேங்கட மணியே!
யென்றனை யாட்கொளும் பொன்றவில் முத்தே!
நினையடை யருநெறி நிகழ்வரி தாயினு
மன்பர்க் கெளிமை யாக லானீ
யென்று முன்ற னிணைத்தாட்
பொறித்தென் சிரத்திற் பொலியவைப் பாயே. (25)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

பொலியும் வலக்கைப் பொலந்திகிரி வாச
மலிந்திலங்கும் பூந்துழாய் மாலே!—நலியிருளை
நீக்கு மலர்க்கழல்கள் வேங்கடவ! நேர்வருனை
வாக்குமனத் தாற்றுதிப்ப வர் (26)

(கட்டளைக் கலித்துறை.)

துதிப்பவ ரைப்பெருந் தூய பதத்தினிற் றோன்றவமைத்
துதிப்பவ ராகா வொருவர நல்குவை சுற்றரவத்
துதிப்பவ ரார்நாந் தொடுவிடங் காலத் துகைத்துறக்கத்
துதிப்பவ ரன்னார்த் தொலைவேங் கடவ! வெற்சூழ்ந்தருளே (27)

(நேரிசை யாசிரியப்பா.)

அருளற முறத்திகழ் கருமுகில் வண்ண!
அடைந்தார்ப் புரந்து மல்லவர்ச் சவட்டியு
யறத்தினை நிறுத்திய திறத்தமர் செல்வ!
அழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மையைக் கந்தசற் கிரங்கி!
நாண்முதற் செருவிடை நாட்டிய நாயக!
நனிநகு தற்பொருட் டன்று நட்டன்
மிகுதிக் கண்ணே மேற்சென் றிடித்தற்

பொருட்டெனத் தேவர் புகட்டிய பொருண்மொழி
கோடர வேந்தன் கோடித் தவணையை
மதுவக மூழ்கியே வாரா னாக
வுய்தியிற் கொடுவினை யெய்துமற் றவனை
யெனவே யுன்னி யிலக்குவற் கொண்டவற்
குறுத்தியங் நட்பிற் குறுகுறை தீர்த்தோய்
பிறன்மனை விழைதலின் பெரும்பழி பொருதே
வேண்டு நன்மதி யீண்டிக் கொளுத்தியுங்
கொள்ளா னாக விள்ளுந லைக்கொண்
டுன்னடி பற்றி யுன்னியே யபயம்
புக்கவீ டணனைப் புகலளித் துவந்தோய்
மழபுல வஞ்சியின் மாண்பினுக் கேற்ப
விலங்கனு மனைக்கொண் டிலங்கையை யெரித்தோய்
பூவை நிலையெனும் பொலிதுறை யமைந்திடப்
புவியிடை மானிட னாகப் பொருந்தியும்
செருக்களத் தொருபெருந் தேவ னாகவே
தசமுக னினைந்திடச் சதுரா னயினோய்
கொற்றத் தலைவனற் கோதண்ட வள்ளலை
யேத்தித் தன்முன் னிரும்பதி யழிந்தமைக்
கிரங்கிய வதனா லேர்கொற்ற வள்ளலை
வீடண னறிந்திட வீர முணுற்றியோய்
ஆற்றற் கொண்ணா வரும்பிழை தன்னைநின்
பகைஞன்பாற் கண்டருந் தகைய வரச
வாகைக் கேற்ப வாறியு மற்றவன்
றன்மன நெறியே வன்மனப் பேய்போ
லிருந்தன னாக விறந்துகப் புரிந்துபின்
வாகை காட்டி வாகை மிலைந்தோய்
பொருண்மொழிக் காஞ்சிப் பொருளமை தியினைப்
பேரர சாண்டு பீடார் வையகம்
பிறங்கடை தழைந்து பிறங்கிட வமைத்தோய்
இனையநின் செயலினை யெண்ணுங் காலைத்
தென்சொற் கடந்தான் சீர்பட சொற்கடற்
கெல்லை தேர்ந்தா னென்ற வாசக
நெஞ்சினிற் பதிய நினைவேங் கடவ!
நினைந்து நினைந்து நீரா யுருகி
வாழ்த்துவ னின்னருள் வாழ்கநின் பொற்றாள்
வாழிநின் னடியவர் வாழிபல் லூழி
யோங்கி யுலகளந் துயர்ந்த
திருநெடு மாலெனுந் திருப்பே ரோயே. (28)

(இருவிகற்ப நேரிசைவெண்பா.)

பேரானு மெங்கும் பெயர்வானுங் குல்லையந்
தாரானு முத்தி தருவானு—மாரானும்
போற்றப் படுமுயர்நற் புண்ணியமார் வேங்கடத்தே
வீற்றிருக்கு மப்பதத்தேவே. (29)

(கட்டளைக் கலித்துறை.)

தேவேந் திரையுறு சீதர! வன்பர்த் திகழவைப்பாய்
தேவேந் திரன்முதற் றேவரும் போற்றுந் திருவ! வுவந்
தேவேந் திரக்கஞ் செறிந்தவ! வேங்கடஞ் சேர்ந்தவ! வந்
தேவேந் திரக்கத் திகிரி வளையருள் செய்தவனே. (30)

[வாழ்த்து.] (நூற்பயன்)

[இருவிகற்ப நேரிசை வெண்பா.]

மூர்த்திதிரு வேங்கடவன் மும்மணிக் கோவைநூல்
சீர்த்தியோடு வாழி சிறந்துலகி—லார்த்திமிக
வோதுவோர் சிந்திப்போ ருள்ளுருகிக் கேட்டிடுவோர்
சூதகற்றி வாழ்கவுவந் து.

இங்ஙனம்
கவிராஜ பண்டிதர்

ஸ்ரீமுக ஆண்டு சித்திரைத்திங்கள் முதல் நாள்.
ஆந்திரக் காசியப திம்மப்ப அந்தணனார்,
தமிழ் விரிவுரை யாளர்,
முனிசிபல் கல்லூரி, சேலம்.

சேலத்தைச் சார்ந்த குகையெனும் பதியில் வர்த்தகப் பெருஞ் செல்வராய் விளங்குகின்ற திருவாளர் தொட்டண்ண செட்டியாரவர்கள் திருப்புதல்வரும், கலைவலாளரும், பிரபு, சிகாமணியுமாகிய

## திருவாளர் T. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்மீது,

சேலம் நகர பரிபாலனக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகிய ஆந்திரக்காசியபதிம்மப்ப அந்தணரவர்கள் பாடிய

# நவமணிமாலை.

(விநாயகர் காப்பு.)

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

திருவருணைச் செல்வன்றன் சேவடிகள் போற்றித்
திருவளர்க்கும் பண்புகெழு சீமான்—ஒருவரிய
மன்குகைவா ழண்ணா மலைநவம ணிம்மாலை
துன்னவரன் மைந்தன் றுணை.

(எழுசீராசிரியச்சந்த விருத்தம்.)

உலகின்க ணென்று முலையாத கீர்த்தி யுற்றேயு யர்ந்து மிளிரும்
அலகில்பன் மகிமை யரனார் தமுள்ள மன்புற்ற ருள்செய்மொழி [கள்
பலவுண்ட வற்றுண் மிகுமேன்மை பார்க்கின் பகர்வண் டமிழ்க்கு [ரியதாம
இலகும்ந லன்ப! அண்ணாமலை! யிதனை யேற்றுய்ந னூற்ப [யில்வால் (1)

(அறுசீராசிரியச்சந்த விருத்தம்.)

பயின்றத மிழ்ப்பயன் னூற்பல பயிறலுங் கேள்வி மடுத்தலுமே
குயின்றவி வற்றொடு முற்கொடை வள்ளல்கள் கூறுவமைபெறவே
சயிலவ ரன்றரு நற்பெயர் சான்றவ! சால வமைந்தனையா
லயிலவ னல்லரு ளார்வுற் றிலகுக வகில தலந்தனிலே (2)

(சந்தக் கலித்துறை.)

தனியாரு நிலையோங்குந் தெய்விகஞ் சேர்வீரத் தண்டமிழிதன்
கனிமானு நிறைசான்ற சுவைவீறு கால்வீசக் கண்டேயுளம்
இனியாத விழலோர்த மிறுமாப்பை யிருஞ்செல்வ மென்போன் [றவர்
நனியார்ந்து மகிழ்வோங்க வண்ணுமலை! நல்கி நாற்றுவித்தாய் (3)

வித்தாயொர் முதலாகி வெளியாகி வளியாகி விளைகனலுமாய்த்
தத்தார வாரங்கொள் புனலாகித் தரையாகித் தனியறிவுமாய்க்
கொத்தார மாலைவண் டுளபங்கு லாவும்மெங் கோமானுறும்
வித்தார கிரிவேங்க டத்தன்பு விளைப்பாய்நீ யண்ணுமலை! (4)

அண்ணுமலையன்ப! புலைஞர்க்கும் வலைஞர்க்கும் அசங்கொன் [றளி
நண்ணுமலுவர்க்குங்கள் விலைஞர்க்குங் கொலைஞர்க்கும் [நாடாமல்பல்
கண்ணூர்வெண் பொற்காசு கண்டையும் புல்லோர்கள் கைநாணுமா
றெண்ணூர்விற் பொற்றாசு நற்காசு மெற்கீந்து புகழேந்திநுய் (5)

(அறுசீரடியாசிரிய விருத்தம்-)

ஏந்தியவெற் புடையபிரா னெழுந்தருளி
  வீற்றிருக்கு மெழிலார் குன்றம்
பாந்தமறு வேங்கடமீ தோர்மும்ம
  ணிக்கோவை பகர வேயான்
வேந்த! மகிழ் வுடனேக்கி யச்சிடற்கு
  விரைந்து பொருண் முழுது மீந்தாய்
காந்துமிதற் கொன்றீடா மென்னுளது?
  கைம்மாறண்ணுமலையாய்! (6)

(எழுசீராசிரியச்சந்த விருத்தம்.)

மலைவி லாற்கு மலைவி லாது மாம றைய ரும்பொருள்
நிலைமையோங்கத் தெளிய வோதி நேய மோடுறுத்தின
கலைவ லாளன் கருணைவாரி கார்த்தி கேய னையண்ணு
மலையென் சிட! வணங்கு முன்றன் மாண்பு நன்று நன்றரோ (7)

(கட்டளைக் கலித்துறை.)

நன்றா யறிஞர்களுடும் பொருளினை நன்குணர்ந்தே
பின்றாவகைமுறை பெட்புட னேறிப் பெருமையதாய்க்
குன்றா நடுநிலை நண்ணார் விளங்குங் குறியினர்பா
னின்றாய் தெரிதர வண்ணா மலையாய் நிலவுகவே. (8)

(அறுசீரடியாசிரிய விருத்தம்.)

நிலவு புகழ்ச் சேலநகர்க் குகைப்பதியிற்
றேவாங்க நீள்கு லஞ்செய்
குலவுபய னாயுதித்த தொட்டணவே
ளீன்றதவக் குமா ரனாகி
யிலகொழுக்கம் வாய்மை பணி யறம்பக்தி
யாதியிவை யியல்பாய்த் தோன்றித்
தலம்விளங்கத் திகழண்ணா மலைவள்ளால்!
தருமா! நீ டூழி வாழி. (9)



ஸ்ரீ இலக்ஷ்மிவிலாஸ் பிரஸ், சேலம்.

## பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| vi | 32 | புரிந்த்ரார்கள் | புரிந்தார்கள் |
| xiii | 7 | சாற்றுக்கவிகள் | சாற்று கவிகள் |
| xv | 22 | விருத்சம் | விருத்தம் |
| xvi | 10 | துரைவுறுநிஞ் | துரைநிறுவுஞ் |
| xix | 28 | மல்குபுகழணஞெ | மல்குபுகழண்ஞெ |
| 2 | 28 | மொண்ணிணர்ப் | மொள்ளிணர்ப் |
| 8 | 34 | தாயாய் | பாயாய் |
| 8 | 35 | பாயாய்ப் | தாயாய்ப் |
| 15 | 9 | வாசுதேவா ! | வாசதேவ ! |
| 17 | 14 | சீர்த்தியோடு | சீர்த்தியொடு |

இந்நூல் கிடைக்குமிடம்:—

பண்டிதர் ரா. திம்மப்ப ஐயர்,

தமிழ் விரிவுரையாளர்,

முனிசிபல் கல்லூரி,

சேலம்.